# நபி (ஸல்) அவர்களின் தொழுகை

தொகுப்பு :

**அப்துல் அஸீஸ் பின் அப்தில்லாஹ் பின் பாஸ் (ரஹ்)**

தமிழில்

எம். அஹ்மத் (அப்பாஸி)

வெளியீடு

இஸ்லாமிய அழைப்பு நிலையம்

ரியாத் - ஸவூதி அரேபியா

# அத்துடன்……

- ☒ இசை
- ☒ உருவப்படம்
- ☒ புகைத்தல்
- ☒ தாடி சிரைத்தல்
- ☒ ஆண்கள் ஆடையைத் தொங்கவிடல்
- ☒ உரோஷமுள்ள தகப்பனுக்கோர் உபதேசம்

தொகுப்பு :

அப்துல் அஸீஸ் பின் அப்தில்லாஹ் பின் பாஸ் (ரஹ்)

முஹம்மத் பின் ஸாலிஹ் அல் உஸைமீன் (ரஹ்)

அப்துல்லாஹ் பின் அப்திர்ரஹ்மான் அல் ஜிப்ரீன் (ரஹ்)

மீள்பரிசீலனை

எம். ஜே. எம். ரிஸ்மி (அப்பாஸி)

எம். எஸ். எம். பாஹிர் (கபூரி)

# صفة صلاة النبي ﷺ

## تأليف

## سماحة الشيخ عبد العزيز بن عبد الله بن باز رحمه الله


ترجمة

أبو عبد الرحمن أحمد بن محمد



الناشر

المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالربوة

الرياض – المملكة العربية السعودية

# ومعه التحذير من

- الغناء
- التصوير
- التدخين
- حلق اللحية
- والإسبال

## ونصيحة لكل أب غيور

مراجعة

محمد رزمي محمد جنيد

محمد فاخر زبير

# உள்ளே...


| | விடயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | உள்ளே.... | 05 |
| 2 | நபியவர்களின் தொழுகை முறை | 06 |
| 3 | ஸலாம் கொடுத்த பின் | 18 |
| 4 | உபரியான தொழுகை | 20 |
| 5 | கூட்டுத்தொழுகையின் அவசியம் | 23 |
| 6 | இசை | 30 |
| 7 | உருவம் வரைதல் கூடாது | 33 |
| 8 | தாடி சிரைப்பது கூடாது | 36 |
| 9 | ஆண்கள் ஆடையைத் தொங்க விடல் | 37 |
| 10 | புகை பிடித்தல் கூடாது | 40 |
| 11 | உரோசமுள்ள தகப்பனுக்கோர் உபதேசம் | 42 |

அளவற்ற அருளாலனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய இறைவனின் திருப்பெயரால் ஆரம்பிக்கின்றேன்

# நபி (ஸல்) அவர்களின் தொழுகை

புகழனைத்தும் ஏக இறைவன் ஒருவனுக்கே.

சாந்தியும் சமாதானமும் அவனுடைய அடியாரும் தூதருமாகிய முஹம்மத் ( ஸல்) அவர்களுக்கும் அவர்களின் கிளையார் தோழர்கள் அனைவர் மீதும் உண்டாவதாக.

இது நபி ( ஸல்) அவர்களின் தொழுகை முறையை விபரிக்கும் சுருக்கமான சொற்றொடராகும், இதனை பார்க்கும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் நபிகளாரைப் பின்பற்ற முயற்சிக்க வேண்டுமென்பதற்காக இதனை முன்வைக்கிறேன்.

நபி ( ஸல்) அவர்கள் கூறினார்கள் : ''என்னை எவ்வாறு தொழக்கண்டீர்களோ அவ்வாறே தொழுங்கள்'''' (புஹாரி : 361)

## அத்தொழுகை முறை பின்வருமாறு :

(1) வுழூவைப் பரிபூரணமாகச் செய்தல் :

''விசுவாசங்கொண்டோரே! நீங்கள் தொழுகைக்குத் தயாரானால் (அதற்கு முன்னதாக) உங்கள் முகங்களையும், முழங்கைகள் வரையில் உங்கள் இருகைகளையும் கழுவிக்கொள்ளுங்கள், (நீரைத்தொட்டு) உங்கள் தலைகளையும் தடவி(மஸ்ஹு{செய்து)க் கொள்ளுங்கள், கணுக்கால் வரையில் உங்கள் இரு பாதங்களையும் ( கழுவிக்கொள்ளுங்கள்)'''' (அல்மாஇதா : 6) என்ற அல்லாஹ்வின் திருவசனத்தை அமுல்படுத்தும் முகமாக அவன் ஏவிய பிரகாரம் வுழூச் செய்து கொள்ள வேண்டும்.

நபியவர்கள் கூறினார்கள் : ''வுழூவின்றி தொழுகையும், மோசடிப் பொருளிலிருந்து செய்யப்படும் தர்மமும் ஏற்கப்பட மாட்டாது'''' (முஸ்லிம் : 224), மேலும் நபியவர்கள் தொழுகையில் தவறிழைத்தவரைப் பார்த்து ''நீ

தொழ நாடினால் வுழூவைப் பரிபூரணமாகச் செய்"" (புஹாரி 6251, முஸ்லிம் 397) என்று கூறினார்கள்.

(2) தொழக்கூடியவர் எங்கிருந்தாலும் ( மக்காவிலுள்ள) கஃபாவை முழுமையாக முன்னோக்க வேண்டும்.

அவர் தொழும் தொழுகை கடமையானதா? அல்லது உபரியானதா? என்பதைக் குறிப்பிட்டு மனதால் எண்ணிக் கொள்ள வேண்டும், ஆனால் நிய்யத்தை மொழியக் கூடாது, ஏனெனில் நபியவர்களோ தோழர்களோ நிய்யத்தை மொழியவில்லை. இமாமாக அல்லது தனித்துத் தொழுபவராக இருந்தால் நபியவர்களுடைய ஏவலுக்கேற்ப அவருக்கு முன்னால் ஒரு தடுப்பை வைத்துக் கொள்வார். ஒரு சில சந்தர்ப்பங்களைத் தவிர ஏனைய நேரங்களில் கிப்லாவை முன்னோக்குவது தொழுகையின் நிபந்தனையாகும், இதுபற்றிப் பல நூற்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

(3) தான் ஸுஜூத் செய்யும் இடத்தை நோக்கியவராக الله أكبر என்று தக்பீரதுல் இஹ்ராம் (முதலாம் தக்பீர்) சொல்வார்.

(4) தக்பீர்ச் சொல்லும் போது தனது இரு கைகளையும் தனது தோள்புயம் அல்லது காதின் கீழ்ப் பகுதி வரை உயர்த்துவார்.

(5) தனது வலது கையை இடது கையின் மணிக்கட்டு, முன்னங்கை, குடங்கை ஆகிய மூன்று இடங்களிலும் படுமாறு வைப்பார். வாஇல் பின் ஹுஜ்ர் ( ரழி) அவர்களுடைய ஹதீஸும், குபைஸா பின் ஹலப் ( ரழி) அவர்கள் தனது தந்தை வாயிலாக (நபியவர்களைத் தொட்டும்) அறிவித்த ஹதீஸும் இதற்கு சான்றாக அமைகின்றன.

(6) பின்னர் தொழுகையின் ஆரம்ப துஆவை ஓதுவார் :

اَللّٰهُمَّ بَاعِدْ بَيْنِيْ وَبَيْنَ خَطَايَايَ كَمَا بَاعَدْتَّ بَيْنَ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ، اَللّٰهُمَّ نَقِّنِيْ مِنْ خَطَايَايَ كَمَا يُنَقَّى الثَّوْبُ الْأَبْيَضُ مِنَ الدَّنَسِ ، اَللّٰهُمَّ اغْسِلْنِيْ مِنْ خَطَايَايَ بِالثَّلْجِ وَالْمَاءِ وَالْبَرَدِ

(அல்லாஹும்ம பாஇத் பைனீ வபைன கதாயாய கமா பாஅத்த பைனல் மஷ்ரிகி வல்மஃரிபி. அல்லாஹும்ம நக்கினீ மின் கதாயாய கமா

யுனக்கஸ் ஸௌபுல் அப்யழு மினத்தனஸ். அல்லாஹும்ம஁ஸில்னீ மின் கதாயாய பிஸ்ஸல்ஜி வல்மாஇ வல்பரத்.)

பொருள் : இறைவா! கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையே வெகு தூரத்தை நீ ஏற்படுத்தியதைப் போன்று எனக்கும் எனது தவறுகளுக்குமிடையே தூரத்தை ஏற்படுத்துவாயாக, இறைவா! வெண்மையான ஆடை அழுக்கிலிருந்து தூய்மைப் படுத்தப்படுவது போன்று என்னை என் தவறுகளிலிருந்து தூய்மைப் படுத்துவாயாக, இறைவா! தண்ணீராலும் பனிக்கட்டியாலும் ஆலங்கட்டியாலும் என் தவறுகளைக் கழுவி விடுவாயாக. (புஹாரி 744 முஸ்லிம் 598)

அவர் விரும்பினால் அதற்குப் பதிலாக, நபியவர்களின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ள பின்வரும் துஆவையும் ஓதலாம் :

سُبْحَانَكَ اللّٰهُمَّ وَبِحَمْدِكَ وَتَبَارَكَ اسْمُكَ وَتَعَالَى جَدُّكَ وَلَا إِله غَيْرُكَ

(ஸுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக வதபாரகஸ்முக வதஆலா ஜத்துக வலாஇலாஹ கைருக.)

பொருள் : உயர்வடைந்து விட்ட உனது மகத்துவம், இன்னும் பாக்கியமிக்க (பரகத்துடைய) உனது பெயர், மேலும் மகத்தான உனது புகழ் (ஆகியவைகளைக்) கொண்டு (சகல குறைகளில் இருந்தும்) உன்னை நான் பரிசுத்தமாக்குகிறேன் ( துதிக்கிறேன்) மேலும் நீயின்றி (வணக்கத்திற்குரியவன் வேறு) இறைவனில்லை.

மேற்கண்ட இரு துஆக்களையும் தவிர்ந்த, ஆதார அடிப்படையில் வந்துள்ள ஏனைய துஆக்களையும் ஓதலாம், இவ்விரு துஆக்களையும் மாற்றி மாற்றி ஓதுவது சிறந்ததாகும், ஏனெனில் அதுவே நபியைப் பின்பற்றுவதில் மிகப் பரிபூரணமாகும்.

பின்பு

أَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ، بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيْمِ

(அஊது பில்லாஹி மினஷ் ஷைதானிர் ரஜீம். பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்) என்று கூறுவார், "ஸூரத்துல் பாத்திஹா ஓதாதவருக்குத் தொழுகையில்லை"" என நபியவர்கள் கூறியதற்கமைய ஸூரத்துல் பாத்திஹாவை ஓதுவார் (புஹாரி 756, முஸ்லிம் 595)

ஸூரத்துல் பாத்திஹா ஓதியதன் பின்னால் சப்தமிட்டு ஓதும் தொழுகைகளில் (ஸுபஹ், ம஻ரிப், இஷா) சப்தமாகவும் இரகசியமாக ஓதும் தொழுகைகளில் ( ளுஹர், அஸர்) இரகசியமாகவும் "ஆமீன்"" என்று கூறுவார். அதன்பின் ஏதாவது விரும்பிய ஸூராவை ஓதுவார். அதில் ளுஹர், அஸர், இஷா ஆகிய தொழுகைகளில் "ஔஸாதுல் முபஸ்ஸல்""[(1)] ஸூராக்களிலிருந்து தெரிவு செய்து ஓதுவார். ஸுபஹுத் தொழுகையில் "திவாலுல் முபஸ்ஸல்""[(2)] ஸூராக்களிலிருந்தும் ம஻ரிப் தொழுகையில் "கிஸாருல்முபஸ்ஸல்""[(3)] எனப்படும் ஸூராக்களிலிருந்தும் ஓதுவார். சில சந்தர்ப்பங்களில் ம஻ரிப் தொழுகையில் "திவாலுல் முபஸ்ஸல்"" அல்லது "ஔஸாதுல் முபஸ்ஸல்"" எனப்படும் ஸூராக்களிலிருந்தும் ஓதுவார். நபியவர்கள் இவ்வாறு ஓதியதாக அறிவிப்புக்கள் வந்துள்ளன. அஸர் தொழுகையில் ளுஹர் தொழுகையைவிட சற்று குறைவாக ஓதுவார்.

(7) தனது இரு கைகளையும் தோள் புயத்தளவிற்கு அல்லது காதளவிற்கு உயர்த்தி தக்பீர் சொல்லியவராக ருகூ஻ செய்வார்.

(ருகூ஻வில்) தனது விரல்களை பிரித்தவண்ணம் தனது இருகைகளையும் முட்டுக்காலில் வைத்து, தலையும் முதுகும் சமமாக இருக்குமாறு அமைத்துக் கொள்வார். அதில் سُبْحَانَ رَبِّيَ الْعَظِيْمْ ( ஸுப்ஹான ரப்பியல் அழீம்) என்று கூறிக்கொள்வார்.

---

(1) ஔஸாதுல் முபஸ்ஸல் அத்தியாயங்கள் : ஸூரா அந்நப஻ (78) முதல் ஸூரா அழ்ழுஹா (93) வரை.

(2) திவாலுல் முபஸ்ஸல் அத்தியாயங்கள் : ஸூரா அல்ஹுஜ்ராத் (49) முதல் ஸூரா அல்லைல் (92) வரை.

(3) கிஸாருல் முபஸ்ஸல் அத்தியாயங்கள் : ஸூரா அழ்ழுஹா (93) முதல் ஸூரா அந்நாஸ் (114) வரை.

பொருள் : மகத்தான என்னுடைய இறைவனைத் துதிக்கிறேன்.

அதனை மூன்று தடவை அல்லது அதற்கதிகமாகச் சொல்வது சிறந்ததாகும். அதனுடன் சேர்த்து பின்வரும் துஆவையும் ஓதிக்கொள்வது விரும்பத்தக்கதாகும்.

سُبْحَانَكَ اللّٰهُمَّ رَبَّنَا وَبِحَمْدِكَ اَللّٰهُمَّ اغْفِرْلِيْ

(ஸுப்ஹானகல்லாஹும்ம ரப்பனா வபிஹம்திக அல்லஹும்மஃபிர்லீ)

பொருள் : இறைவா நீ தூயவன், எங்கள் இறைவா! உன்னைப் புகழ்கிறேன் என்னை மன்னித்துவிடுவாயாக.

(8) இருகைகளையும் தோள்புயம் அல்லது காதளவிற்கு உயர்த்தி நடுநிலைக்கு வருவார்.

அவர் இமாமாக அல்லது தனித்துத் தொழுபவராக இருந்தால் سَمِعَ اللهُ لِمَنْ حَمِدَهُ (ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹு) என்று கூறுவார்.

பொருள் : தன்னைப் புகழ்வதை அல்லாஹ் கேட்டுக் கொண்டான்.

நடுநிலையில் அனைவரும் ( இமாம், மஃமூம், தனித்துத் தொழுபவர்) பின்வரும் துஆவைக் கூறுவர் :

رَبَّنَا وَلَكَ الْحَمْدُ حَمْداً كَثِيْراً طَيِّباً مُبَارَكاً فِيْهِ مِلْءَ السَّمَاوَاتِ وَالْأَرْضِ ومِلْءَ مَا شِئْتَ مِنْ بَعْدُ

(ரப்பனா வலகல்ஹம்து ஹம்தன் கஸீரன் தய்யிபன் முபாரகன் பீஹி மில்அஸ்ஸமாவாதி வல்அர்ழி வமில்அ மாஷிஃத மின்பஃது)

பொருள் : இறைவா! தூய்மையான அருள் நிறைந்த ஏராளமான புகழ் அனைத்தும் உனக்கே உரியது. வானங்கள் பூமிகள் நிரம்ப, இதற்குப் பிறகு நீ விரும்பும் அத்தனை பொருள்களும் நிரம்ப (புகழ் அனைத்தும் உனக்கே).

(9) தனது இரு முழங்கால்களையும் முதலில் வைத்து தக்பீர் சொல்லியவராக ஸஜ்தாச் செய்வார்.

அவ்வாறு முடியாவிட்டால் முதலில் தனது இரு கைகளையும் பின்னர் தனது இரு முழங்கால்களையும் வைப்பார், தனது இரு கால்களையும் வளைத்து கிப்லாத் திசையை முன்னோக்கும் விதமாகவும், தனது இரு கைவிரல்களைச் சேர்த்து கிப்லாவை முன்னோக்கிய விதமாகவும் வைக்க வேண்டும். ஸுஜூதின் போது ஏழு உறுப்புக்கள் தரையில் பட வேண்டும் : மூக்குடன் சேர்த்து நெற்றி, இரு உள்ளங்கைகள், இரு முழங்கால்கள், இரு பாதங்களின் நுனி விரல்கள். மேலும் மூன்று விடுத்தம் அல்லது அதற்கதிகமாக

سُبْحَانَ رَبِّيَ الْأَعْلَى

(ஸுப்ஹான ரப்பியல் அஃலா) என்று கூறுவார்.

பொருள்: உயர்வான என் இறைவன் பரிசுத்தமானவன்.

அதனுடன் சேர்த்து

سُبْحَانَكَ اللّهُمَّ رَبَّنَا وَبِحَمْدِكَ اللّهُمَّ اغْفِرْ لِيْ

(ஸுப்ஹானகல்லாஹும்ம ரப்பனா வபிஹம்திக அல்லஹும்மஃபிர்லீ) என்று கூறுவதும் விரும்பத்தக்கது.

பொருள் : இறைவா நீ தூயவன், எங்கள் இறைவா! உன்னைப் புகழ்கிறேன் என்னை மன்னித்துவிடுவாயாக.

நபியவர்களின் பின்வரும் கூற்றுகளுக்கமைய ( ஸஜ்தாவில்) அதிகமதிகம் பிரார்த்தனை செய்வார் :

1) "ருகூஃவில் இறைவனை ( அதிகம்) துதியுங்கள், ஸுஜூதில் அதிகம் பிரார்த்தனை செய்யுங்கள், உங்கள் பிரார்த்தனை ஏற்கப்பட அது மிகவும் பொருத்தமான இடமாகும்"" (அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரழி), ஆதாரம் : முஸ்லிம் 479).

2) "ஓர் அடியான் ஸுஜூதிலேயே தனது இறைவனுக்கு மிக நெருக்கமாக உள்ளான், எனவே அதில் அதிகமாகப் பிரார்த்தியுங்கள்"" (அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரழி), ஆதாரம் : முஸ்லிம் 482)

அதில் தனக்காகவும் பிற சகோதர முஸ்லிம்களுக்காகவும் ஈருலக நலவுகளைக் கேட்பார். அத்தொழுகை கடமையானதாக இருந்தாலும், அல்லது உபரியானதாக இருந்தாலும் சரியே.

தனது தோள் புயங்களை விலாக்களை விட்டும் தூரமாக்கியும், வயிறை தொடைகளை விட்டும் தூரமாக்கியும், தொடைகளைக் கால்களை விட்டும் தூரமாக்கியும் வைப்பார். தனது இரு முன்னங்கைகளையும் தரையில் படாமல் உயர்த்தி வைக்க வேண்டும், நபியவர்கள் கூறினார்கள்: "ஸஜ்தாவில் நடுநிலையைக் கடைபிடியுங்கள். உங்களில் எவரும் நாய் விரிப்பதைப் போல் கைகளை விரிக்க வேண்டாம்"". (அறிவிப்பவர்: அனஸ் (ரழி), ஆதாரம் : புஹாரி 822, முஸ்லிம் 493)

(10) தக்பீர் சொல்லியவராகத் தனது தலையை உயர்த்தி நடு இருப்பிற்கு வருவார்.

தனது வலது காலை நட்டு இடது காலை விரித்து அதன் மீது உட்கார்ந்து, இரு கைகளையும் தனது தொடைகளிலும் முட்டுக்கால்களிலும் படுமாறு வைத்துக் கொள்வார். அதில் பின்வரும் துஆவை ஓதுவர் :

رَبِّ اغْفِرْ لِيْ رَبِّ اغْفِرْ لِيْ رَبِّ اغْفِرْ لِيْ اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ وَارْحَمْنِيْ وَاهْدِنِيْ وَارْزُقْنِيْ وَعَافِنِيْ وَاجْبُرْنِيْ

(ரப்பிஃபிர்லீ ரப்பிஃபிர்லீ ரப்பிஃபிர்லீ அல்லாஹும்மஃபிர்லீ வர்ஹம்னீ வஹ்தினீ வர்ஸுக்னீ வஆபினீ வஜ்புர்னீ)

பொருள் : இறைவா ! என்னை மன்னித்து விடு, என்னை மன்னித்து விடு, என்னை மன்னித்து விடு, யாஅல்லாஹ் ! என்னை மன்னித்து விடு, எனக்குக் கிருபை செய், எனக்கு நற்பேறு வழங்கு, எனக்கு சுகம் கொடு, எனக்கு நேர்வழி காட்டிடு, எனக்கு ஆறுதல் அளித்திடு.

ருகூஃவிற்குப் பின் நடுநிலையில் அமைதியாக இருந்ததைப் போன்று, அனைத்து மூட்டுக்களும் அவற்றினுடைய இடங்களுக்கு மீளும் வரை இந்த அமர்விலும் சற்று நேரம் அமைதியாக இருப்பார். ஏனெனில் நபியவர்கள் ருகூஃவிற்குப் பின்னாலும் ( நடுநிலை) இரு ஸஜ்தாக்களுக்குமிடையிலும் ( நடுயிருப்பு) நீண்ட நேரம் அமைதியாக இருப்பார்கள்.

(11) தக்பீர் சொல்லி இரண்டாவது ஸுஜூது செய்வார், அதில் முதலாவது ஸுஜூதில் செய்ததைப் போன்றே செய்வார்.

(12) தக்பீர் சொல்லி (இரண்டாவது ரக்அத்திற்காக) எழுவார்.

இரண்டு ஸஜ்தாக்களுக்கும் இடையில் உட்கார்ந்தது போன்று சற்று நேரம் உட்கார்ந்து எழும்புவார். இது "ஜல்ஸதுல் இஸ்திராஹா"" (ஓய்விருப்பு) எனப்படும். மிகச்சரியான கருத்தின் பிரகாரம் இவ்விருப்பு ஸுன்னத்தாகும், அதை விட்டால் குற்றமில்லை. அதிலே எந்தவொரு திக்ரோ பிரார்த்தனையோ கிடையாது. பின்பு முடியுமானால் தனது இரு முட்டுக்கால்களையும் தரையிலூன்றி இரண்டாவது ரக்அத்திற்காக எழுவார். அது முடியாவிட்டால் தனது இரு கைகளையும் தரையிலூன்றி எழுவார். முதலாவது ரக்அத்தைப் போலவே ஸூரத்துல் பாத்திஹா ஓதி பின் முடியுமான ஒரு ஸூராவையும் ஓதுவார்.

பின்பற்றித் தொழுபவர் இமாமை ஒருபோதும் முந்திவிடக் கூடாது. ஏனெனில் நபியவர்கள் தனது சமூகத்தை அதைவிட்டும் எச்சரித்துள்ளார்கள். இமாமுடன் சேர்ந்து போவதும் ( மக்ரூஃ) விரும்பத்தகாததாகும். ( ஒவ்வொரு செயற்களிலும்) இமாமுடைய செயல் முடிந்தவுடனும், சத்தம் நின்றவுடனும் தாமதமின்றிச் செய்வதே அவருக்கு (பின்பற்றித் தொழுபவருக்கு) ஸுன்னத்தாகும். நபியவர்கள் கூறினார்கள் : "இமாம் ஏற்படுத்தப் பட்டிருப்பது பின்பற்றப் படுவதற்கே. எனவே நீங்கள் அவருக்கு மாற்றம் செய்ய வேண்டாம். அவர் தக்பீர் கூறும்போது நீங்களும் தக்பீர் கூறுங்கள். அவர் ருகூஃ செய்யும்போது நீங்களும் ருகூஃ செய்யுங்கள். அவர் ஸமி அல்லாஹு லிமன் ஹமிதா எனக் கூறும்போது நீங்கள் ரப்பனா வலக்கல் ஹம்து எனக் கூறுங்கள். அவர் ஸஜ்தாச்

செய்யும்போது நீங்கள் ஸஜ்தாச் செய்யுங்கள்"" ( அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி), ஆதாரம் : புஹாரி 734, முஸ்லிம் 411).

(13) அத்தஹிய்யாத் ஓத உட்காருதல் :

பஜ்ர், ஜும்ஆ, பெருநாள் போன்ற இரண்டு ரக்அத்துக்கள் கொண்ட தொழுகையாக இருந்தால் இரண்டாவது ஸஜ்தாவிற்குப் பின்னால் வலது காலை நாட்டி, இடது காலை விரித்து, வலது கையை வலது தொடையின் மீது ஆட்காட்டி விரலைத் தவிர ஏனைய விரல்களை மடக்கி வைத்து உட்கார்வார். அல்லாஹ்வை நினைவு கூறும்போதும், பிரார்த்தனையின் போதும் அவ்விரலால் ( ஆட்காட்டி விரலால்) ஏகத்துவத்தின்பால் சுட்டிக்காட்டுவார். அவருடைய கை சின்னிவிரல் மோதிரவிரல் ஆகியவற்றை மடித்து, பெருவிரலை நடுவிரலுடன் வளையல் அமைப்பில் சேர்த்து, ஆட்காட்டி விரலால் சுட்டிக்காட்டினால் அதுவும் சிறந்ததாகும். ஏனெனில் இரு முறைகளும் நபியவர்களிடமிருந்து வந்துள்ளன. இரு முறைகளையும் மாற்றி மாற்றிச் செய்வதே சிறந்ததாகும். அவரது இடது கையை இடது தொடை, முட்டுக்காலின் மீது வைத்துக்கொள்வார். பின்பு இவ்விருப்பில் அத்தஹிய்யாத் ஓதுவார், அது :

التَّحِيَّاتُ لِلَّهِ وَالصَّلَوَاتُ وَالطَّيِّبَاتُ ، السَّلاَمُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللَّهِ وَبَرَكَاتُهُ ، السَّلاَمُ عَلَيْنَا وَعَلَى عِبَادِ اللَّهِ الصَّالِحِينَ ، أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ ، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ .

(அத்தஹிய்யாது லில்லாஹி வஸ்ஸலவாது வத்தய்யிபாது அஸ்ஸலாமு அலைக அய்யுஹந் நபிய்யு வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹூ அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன். அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹ் வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வரஸூலுஹூ)

பொருள் : காணிக்கைகளும் வணக்கங்களும் பாராட்டுக்களும் அல்லாஹ்வுக்கே உரியன. நபியே உங்களின் மீது ஸலாமும் அல்லாஹ்வின் ரஹ்மத்தும் பரகத்தும் ஏற்படட்டுமாக! எங்களின் மீதும் அல்லாஹ்வின் நல்லடியார்கள் அனைவர் மீதும் ஸலாம் உண்டாகட்டும், வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை என்று

உறுதியாக நம்புகிறேன். மேலும், முஹம்மத் ( ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாக இருக்கிறார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

பின்பு பின்வரும் ஸலவாத்தைக் கூறுவார் :

اَللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ ، وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلَى إِبْرَاهِيمَ وَعَلَى آلِ إِبْرَاهِيمَ ، إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ ، اللَّهُمَّ بَارِكْ عَلَى مُحَمَّدٍ ، وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلَى إِبْرَاهِيمَ وَعَلَى آلِ إِبْرَاهِيمَ ، إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ

(அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலாஆலி முஹம்மதின் கமா ஸல்லைத அலா இப்ராஹீம வஅலாஆலி இப்ராஹீம இன்னக ஹமீதுன் மஜீத். அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வஅலாஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்ராஹீம வஅலாஆலி இப்ராஹீம இன்னக ஹமீதுன் மஜீத்)

பொருள் : இறைவா! இப்ராஹீம் அவர்களின் மீதும் இப்ராஹீம் அவர்களின் குடும்பத்தார் மீதும் நீ கருணை புரிந்ததைப் போல் முஹம்மதின் மீதும் முஹம்மதின் குடும்பத்தார் மீதும் கருணை புரிந்திடு. நீயே புகழுக்குரியவனும், கண்ணியமிக்கவனும் ஆவாய். இறைவா! இப்ராஹீம் அவர்களின் மீதும் இப்ராஹீம் அவர்களின் குடும்பத்தார் மீதும் நீ உன் அருள் வளத்தைப் பொழிந்தைப் போல் முஹம்மதின் மீதும் முஹம்மதின் குடும்பத்தார் மீதும் உன் அருள் வளத்தைப் பொழிந்திடு, நீயே புகழுக்குரியவனும், கண்ணியமிக்கவனும் ஆவாய்.

மேலும் நான்கு விடயங்களை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுவார்:

اَللَّهُمَّ إِنِّيْ أَعُوذُ بِكَ مِنْ عَذَابِ جَهَنَّمَ ، وَمِنْ عَذَابِ الْقَبْرِ ، وَمِنْ فِتْنَةِ الْمَحْيَا وَالْمَمَاتِ ، وَمِنْ فِتْنَةِ الْمَسِيحِ الدَّجَّالِ

(அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக மின் அதாபி ஜஹன்னம வமின் அதாபில் கப்ரி வமின் பித்னதில் மஹ்யா வல்மமாதி வமின் பித்னதில் மஸீஹித் தஜ்ஜால்)

பொருள் : எங்கள் இரட்சகனே! நரக வேதனையிலிருந்தும், கப்ருடைய வேதனையிலிருந்தும், வாழ்வு, மரணம் ஆகியவற்றின் சோதனையிலிருந்தும், தஜ்ஜாலின் குழப்பத்திலிருந்தும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.

பின்பு ஈருலக நலவுகளிலிருந்து அவர் விரும்பியதைக் கேட்பார், அவருடைய பெற்றோர் மற்றும் ஏனைய முஸ்லிம்களுக்காகவும் பிரார்த்தனை செய்யலாம். அதில் கடமையான தொழுகை, உபரியான தொழுகை என்ற வேறுபாடில்லை. ஏனெனில் நபியவர்கள் இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களுக்கு தஷஹ்ஹுதை (அத்தஹிய்யாத்தை)க் கற்றுக் கொடுத்த பின் ''பின்னர் உங்களுக்கு விருப்பமான துஆவைத் தேர்ந்தெடுத்து அதன் மூலம் துஆச் செய்யுங்கள்'''' என்று கூறினார்கள். (முஸ்லிம் 402). மற்றோர் அறிவிப்பில் : ''பின்னர் விருப்பமான தேவையைத் தெரிவு செய்து கேட்கட்டும்'''' என்று கூறினார்கள். ( புஹாரி 835) இது ஓர் அடியானுக்கு ஈருலகிலும் பலனளிக்கும் அனைத்தையும் உள்ளடக்குகின்றது.

பின்னர் السلام عليكم ورحمة الله ( அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லஹ்) என்று வலது, இடது பக்கங்களுக்குத் திரும்பி ஸலாம் சொல்வார்.

(14) மூன்றாம் ரக்அத்துக்காக எழுதல்.

மஃரிப் போன்ற மூன்று ரக்அத் தொழுகையாகவோ அல்லது ளுஹர், அஸர், இஷா போன்ற நான்கு ரக்அத்துக்களைக் கொண்ட தொழுகையாகவோ இருந்தால் ஏற்கனவே கூறப்பட்ட அத்தஹிய்யாத்தை ஸலவாத்துடன் சேர்த்து ஓதுவார். பின்பு தனது முட்டுக்கால்களால் ஊன்றி, இருகைகளையும் தனது தோள்புயம் அளவிற்கு உயர்த்தி الله أكبر என்று கூறியவராக ( மூன்றாவது ரக்அத்திற்காக) எழும்புவார். ஏற்கனவே கூறப்பட்டது போன்று இருகைகளையும் நெஞ்சின் மீது வைத்து பாத்திஹா மாத்திரம் ஓதுவார்.

ளுஹர்த்தொழுகையில் மூன்றாம் நான்காம் ரக்அத்துக்களில் சில சந்தர்ப்பங்களில் பாத்திஹாவை விட மேலதிகமாக ஓதினால் பரவாயில்லை. ஏனெனில் நபியவர்களைத் தொட்டும் இதுபற்றி அபூ ஸஈத் (ரழி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் இடம்பெற்றுள்ளது. முதலிருப்பில் அத்தஹிய்யாத்துக்குப் பின் நபியவர்கள் மீது ஸலவாத்துச் சொல்வதை விட்டால் தவறில்லை, ஏனெனில் முதலிருப்பில் அது கடமையில்லை, மாறாக ஸுன்னாவாகும். பின்னர் மஃரிப் தொழுகையில் மூன்றாம் ரக்அத்திலும் ளுஹர், அஸர், இஷாத் தொழுகைகளில் நான்காவது ரக்அத்திலும் அத்தஹிய்யாத் ஓதுவார், மேலும் நபியவர்கள் மீது ஸலவாத்துச் சொல்வார், அல்லாஹ்விடம் நரக வேதனை, கப்ருடைய வேதனை, வாழ்வு இறப்பு ஆகியவற்றின் சோதனை, தஜ்ஜாலுடைய சோதனை ஆகியவற்றை விட்டும் பாதுகாப்புத் தேடுவார். பின்பு ஏற்கனவே இரண்டு ரக்அத் தொழுகையில் சொல்லப்பட்டதைப் போல் அதிகமாகப் பிரார்த்தனை செய்வார். இச்சந்தர்ப்பத்திலும் ஏனைய சந்தர்ப்பங்களிலும் நபியவர்கள் ஓதியதாக பின்வரும் துஆ அறிவிக்கப்பட்டுள்ளது :

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الْآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ

(ரப்பனா ஆதினா பித்துன்யா ஹஸனதன் வபில்ஆகிரதி ஹஸனதன் வகினா அதாபன்னார்)

பொருள் : எங்கள் இறைவனே! எங்களுக்கு இந்த உலகிலும் நன்மையை அருள்வாயாக! மறு உலகிலும் நன்மையை அருள்வாயாக! மேலும், நரக நெருப்பின் வேதனையிலிருந்து எங்களை நீ காத்தருள்வாயாக.

என்றாலும் இந்த ( இறுதி) அமர்வில் மண்டியிட்டு தரையில் இருப்பிடம் படியுமாறு அமர்ந்து இடதுகாலை வலதுகாலுக்குக் கீழ் வெளிப்படுத்தி, வலதுகாலை நாட்டி வைக்க வேண்டும், இது பற்றி அபூ ஹுமைத் ( ரழி) அவர்கள் ( நபியவர்களைத் தொட்டும்) அறிவிக்கும் நபிமொழி வந்துள்ளது.

பின்பு

السلام عليكم ورحمة الله السلام عليكم ورحمة الله ( அஸ்ஸலாமு அலைகும் வரஹ்மதுல்லாஹ்) என்று வலது புறமும் இடது புறமும் திரும்பி ஸலாம் சொல்வார்.

## ஸலாம் கொடுத்த பின் :

أَسْتَغْفِرُ الله (அஸ்த..பிருல்லாஹ்) என்று மூன்று தடைவ சொல்லி விட்டு பின்வரும் துஆவை ஓதுவார் :

اللَّهُمَّ أَنْتَ السَّلاَمُ ، وَمِنْكَ السَّلاَمُ ، تَبَارَكْتَ يَا ذَا الْجَلاَلِ وَالإِكْرَامِ

(அல்லாஹும்ம அந்தஸ்ஸலாமு வமின்கஸ்ஸலாமு தபாரக்த யாதல்ஜலாலி வல்இக்ராமி)

பொருள் : இறைவா ! நீ சாந்தியளிப்பவன், உன்னிடமிருந்தே சாந்தி ஏற்படுகிறது. மகத்துவமும் கண்ணியமும் உடையவனே நீ பாக்கியமானவன்.

لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ ، لَهُ الْمُلْكُ ، وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ ، لاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إِلاَّ بِاللَّهِ اللَّهُمَّ لاَ مَانِعَ لِمَا أَعْطَيْتَ ، وَلاَ مُعْطِيَ لِمَا مَنَعْتَ ، وَلاَ يَنْفَعُ ذَا الْجَدِّ مِنْكَ الْجَدُّ

(லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹூ லாஷரீகலஹூ லஹூல்முல்கு வலஹூல்ஹம்து வஹூவ அலாகுல்லிஷைஇன் கதீர், லாஹௌல வலாகுவ்வத இல்லாபில்லாஹ், அல்லாஹும்ம லாமானிஅ லிமாஅ..தைத வலாமு..திய லிமாமன..த வலாயன்பஉ தல்ஜத்தி மின்கல் ஜத்து)

பொருள் : வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை, துணை எதுவுமில்லை, அரசாட்சி அனைத்தும் அவனுக்கே உரியது, இன்னும் புகழனைத்தும் அவனுக்கே உரியது, மேலும் அவன் அனைத்துப் பொருட்கள் மீதும் சக்தி வாய்ந்தவன், தீமையிலிருந்து விலகுவதும் நன்மையின் மீது ஆற்றல் பெறுவதும் அல்லாஹ்வின் உதவி கொண்டே

தவிர இல்லை. எங்கள் இரட்சகனே! நீ கொடுப்பதைத் தடுப்பவர் எவரும் இல்லை, நீ தடுப்பதைக் கொடுப்பவர் எவரும் இல்லை, மதிப்புடைய எவரும் எந்தப் பலனும் அளிக்க மாட்டார், மதிப்பு உன்னிடமே உள்ளது.

لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَلاَ نَعْبُدُ إِلاَّ إِيَّاهُ ، لَهُ النِّعْمَةُ وَلَهُ الْفَضْلُ ، وَلَهُ الثَّنَاءُ الْحَسَنُ ، لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ ، مُخْلِصِينَ لَهُ الدِّينَ وَلَوْ كَرِهَ الْكَافِرُونَ

(லாஇலாஹ இல்லல்லாஹு வலாந.ஃபுது இல்லாஇய்யாஹு லஹுந்நி.ஃமது வலஹுல் பழ்லு வலஹுஸ்ஸனாஉல் ஹஸன். லாஇலாஹ இல்லல்லாஹு மு.ஃலிஸீன லஹுத்தீன வலௌ கரிஹல் காபிரூன்)

பொருள் : வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர எவருமில்லை. அவனைத்தவிர வேறெவரையும் நாங்கள் வணங்கமாட்டோம். அருள் அவனுடையது. உபகாரம் அவனுடையது. அழகிய புகழ்களும் அவனுடையன. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர எவருமில்லை. நிராகரிப்போர் வெறுத்தாலும் கலப்பற்ற தூய்மையான வணக்கங்கள் அவனுக்கு மட்டுமே உரியன.

மேலும் سُبْحَانَ الله 33 الحَمْدُ لِله 33 الله أَكْبَر 33

ஸுப்ஹானல்லாஹ் 33, அல்ஹம்து லில்லாஹ் 33, அல்லாஹு அக்பர் 33 தடவை சொல்வார் அதனை 100ஆகப் பரிபூரணப்படுத்த

لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ ، لَهُ الْمُلْكُ ، وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ

"லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹூ லா ஷரீக லஹூ, லஹுல் முல்கு வலஹுல் ஹம்து, வஹுவ அலா குல்லி ஷய்இன் கதீர்"" என்ற கலிமாவை ஓதுவார். பின்னர் ஆயதுல் குர்ஸி, ஸூரதுல் இ.ஃலாஸ் (குல்ஹுவல்லாஹு அஹத்), ஸூரதுல் பலக் (குல் அஊது பிரப்பில் பலக்), ஸூரதுந்நாஸ் ( குல் அஊது பிரப்பிந்நாஸ்) ஆகிய ஸூராக்களை ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னாலும் ஓதுவார்.

அவர் இமாமாக இருந்தால் மூன்று தடைவ இஸ்தி ஃபார் செய்து விட்டு

اللَّهُمَّ أَنْتَ السَّلاَمُ ، وَمِنْكَ السَّلاَمُ ، تَبَارَكْتَ يَا ذَا الْجَلاَلِ وَالإِكْرَامِ

''அல்லாஹும்ம அந்தஸ்ஸலாம், வமின்கஸ்ஸலாம், தபாரக்த யாதல்ஜலாலி வல்இக்ராம்'''' என்று சொல்லியதன் பின்னால் மக்களின் பக்கம் திரும்பி அவர்களை முன்னோக்கி உட்கார்ந்து ஏனைய துஆக்களை ஓதுவார். இதுபற்றி நிறைய நபிமொழிகள் இடம்பெற்றுள்ளன, அதில் ஸஹீஹ் முஸ்லிமில் உள்ள ஆஇஷா ( ரழி) அவர்கள் அறிவிக்கும் நபிமொழியும் உள்ளடங்கும். மேற்கூறப்பட்ட அனைத்து திக்ருகளும் ஸுன்னத்தானதாகும் கடமையானதன்று.

## உபரியான தொழுகைகள் :

ஒவ்வொரு முஸ்லிமான ஆணும் பெண்ணும் தினமும் ''ரவாதிப்'''' (உபரியான ஸுன்னத்துக்கள்) என்று சொல்லப்படும் 12 ரக்அத்துக்கள் தொழுவது விரும்பத்தக்கதாகும். ஏனெனில் இவைகளை நபியவர்கள் ஊரிலிருக்கும் போது பேணித் தொழுது வந்துள்ளார்கள். அவை பின்வருமாறு :

ளுஹருக்கு முன் 4

ளுஹருக்குப் பின் 2

மஃரிபுக்குப் பின் 2

இஷாவிற்குப் பின் 2

பஜ்ருக்கு முன் 2

பிரயாணத்தின் போது பஜ்ருடைய ஸுன்னத், வித்ருத்தொழுகை ஆகியவற்றைத் தவிர ஏனைய ஸுன்னத்தான தொழுகைகளை விட்டு விடுவார்கள். இவ்விரண்டு தொழுகைகளையும் ஊரிலும் பிரயாணத்திலும் (நபியவர்கள்) பேணித் தொழுது வந்துள்ளார்கள். எங்களுக்கும்

அவர்களிடத்தில் அழகிய முன்மாதிரி இருக்கின்றது. இறைவன் கூறுகின்றான் :

{لَقَدْ كَانَ لَكُمْ فِي رَسُولِ اللَّهِ أُسْوَةٌ حَسَنَةٌ } [الأحزاب: 21]

பொருள் : இறைவனுடைய தூதரிடத்தில் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கின்றது. (அஹ்ஸாப் 21)

நபி ( ஸல்) அவர்கள் கூறினார்கள்: "என்னை எவ்வாறு தொழக்கண்டீர்களோ அவ்வாறே தொழுங்கள்"" (புஹாரி : 361).

இந்த ( முன்பின்) ஸுன்னத்தான தொழுகைகளையும் வித்ருத் தொழுகையையும் வீட்டிலே தொழுவதே சிறந்தது. ஒருவர் பள்ளியில் தொழுதால் பரவாயில்லை. நபியவர்கள் கூறினார்கள் : "ஒரு மனிதனின் தொழுகைகளில் சிறந்தது அவன் தன்னுடைய வீட்டில் தொழுவது தான்;, கடமையான தொழுகையைத் தவிர"" (புஹாரி : 7290).

இந்த ( ஸுன்னத்தான) தொழுகைகளைப் பேணித் தொழுவது சுவனத்தில் நுழைவதற்கான காரணங்களில் உள்ளது. உம்மு ஹபீபா (ரழி) அவர்கள், தான் நபி ( ஸல்) அவர்கள் கூறக் கேட்டதாக பின்வருமாறு கூறுகின்றார்கள் : "ஒரு முஸ்லிமான அடியான் தினமும் கடமையானதல்லாமல் உபரியாக 12 ரக்அத்துக்கள் தொழுது வந்தால் அவனுக்கு அல்லாஹ் சுவனத்தில் ஒரு வீட்டைக் கட்டாமல் விடுவதில்லை"" ( ஆதாரம் : முஸ்லிம் 728). இமாம் திர்மிதீ ( ரஹ்) இந்நபிமொழியை அறிவிக்கும் போது நாம் ஏற்கனவே கூறியதை (12 ரக்அத்துக்களை)க் கொண்டே விளக்கமளித்துள்ளார்கள்.

அஸருக்கு முன் 4 , மஃரிபுக்கு முன் 2 , இஷாவிற்கு முன் 2 ரக்அத்துக்கள் தொழுதால் அதுவும் சிறந்தது. ஏனெனில் நபியவர்கள் கூறினார்கள்: "அஸருக்கு முன் 4 ( ரக்அத்துக்கள்) தொழுதவருக்கு அல்லாஹ் அருள் புரிவானாக. ( ஆதாரம் : அபூதாவூத், திர்மிதி, நஸாஈ, அஹ்மத், இப்னு ஹுஸைமா. இமாம் திர்மிதி இதனை ஹஸன் என்றும், இமாம் இப்னு ஹுஸைமா ஸஹீஹ் என்றும் கூறியுள்ளார்கள், இதனுடைய அறிவிப்பாளர் வரிசை ஸஹீஹானதாகும்). மேலும்

நபியவர்கள் ''இரண்டு அதான்களுக்கிடையில் ( அதான்¬ - இகாமத்) தொழுகையுள்ளது'''' என்று இரண்டு தடவை கூறிவிட்டு மூன்றாவது தடவை ''விரும்பியவருக்கு'''' என்று கூறினார்கள். (ஆதாரம் : புஹாரி 624).

நபியவர்களின் பின்வரும் கூற்றிற்கமைய ளுஹருக்கு முன்னால் 4 பின்னால் 4 தொழுதால் அதுவும் சிறந்தது : ''யார் ளுஹருக்கு முன்னால் நான்கும் பின்னால் நான்கும் பேணித்தொழுவாரோ அல்லாஹ் அவரை நரகத்திற்கு ஹராமாக்கிவிடுகின்றான்'''' ( ஆதாரம் : அபூதாவூத், திர்மிதி, நஸாஈ, இப்னு மாஜா, அஹ்மத், இவர்கள் உம்மு ஹபீபா (ரழி) அவர்களைத் தொட்டும் ஸஹீஹான அறிவிப்பாளர் வரிசையைக் கொண்டு அறிவித்துள்ளனர்.)

(இந்நபிமொழியின்) கருத்து : ளுஹருக்குப் பின்னால் ( ஏற்கனவே கூறப்பட்டதைவிட) 2 ரக்அத்துக்களை அதிகமாக்குவார். ஏனெனில் (வழமையாக நபியவர்கள் தொழுத) ராதிபான ஸுன்னத் ளுஹருக்கு முன் நான்கும் பின் இரண்டுமாகும். அதற்குப் பின்னால் இன்னும் இரண்டை அதிகரித்தால் உம்மு ஹபீபா ( ரழி) அவர்களுடைய ஹதீஸில் சொல்லப்பட்ட (சிறப்பை) அடைந்து கொள்வார்.

அல்லாஹ்வே அனுகூலத்திற்குப் பொறுப்பானவன். எங்கள் நபி முஹம்மத் பின் அப்தில்லாஹ் ( ஸல்) அவர்கள் மீதும் அவர்களது கிளையார்கள், தோழர்கள், அவர்களை இறுதிநாள் வரை பின்பற்றும் அனைவருக்கும் அல்லாஹ் ஸலவாத்தும் ஸலாமும் சொல்வானாக.

# கூட்டுத் தொழுகையின் அவசியம்

(இந்த மடல்) அப்துல் அஸீஸ் பின் அப்தில்லாஹ் பின் பாஸ் (ரஹ்) அவர்களிடமிருந்து அனைத்து முஸ்லிம்களுக்கும்!

அல்லாஹ் அவனுடைய பொருத்தத்தின் பால் அனுகூலம் புரிவானாக. அவனைப் பயந்தவர்கள் வரிசையில் அனைவரையும் நெறிப்படுத்துவானாக. ஆமீன்.

அநேகமானோர் தொழுகையைக் கூட்டாக நிறைவேற்றுவதில் கவனயீனமாக இருப்பதாக எனக்கு ( சில தகவல்கள்) வந்தடைந்தன. சில அறிஞர்கள் அவ்விடயத்தை இலகுவாக்கியதை ஆதாரமாகக் காட்டுகின்றனர். எனவே இவ்விடயத்தின் மகத்துவத்தையும் பாரதூரத்தையும் தெளிவுபடுத்துவது என் மீது கடமையாகும். அல்லாஹ் அவனுடைய மகத்தான வேதத்திலும், நபி ( ஸல்) அவர்கள் ( தமது பொன்மொழிகளிலும்) மேம்படுத்திய ஒரு விடயத்தில் எந்தவொரு முஸ்லிமும் கவனயீனமாக இருக்கமுடியாது.

மேலும் அல்லாஹ் தனது திருமறையில் தொழுகையைப்பற்றி அதிகமதிகமாகக் கூறி அதனை சிறப்பாக்கியுள்ளான். அதனைப் பேணிப் பாதுகாத்து, கூட்டாக நிறைவேற்றும் படி ஏவியுள்ளான். மேலும் அதில் அலட்சியமாக இருப்பதும் சோம்பலாக இருப்பதும் நயவஞ்சகர்களுடைய பண்புகளென்றும் அறிவித்துள்ளான். இறைவன் தனது தெளிவான வேதத்தில் கூறுகிறான் : "தொழுகைகளை (குறிப்பாக) நடுத்தொழுகையை பேணிக் கொள்ளுங்கள்; (தொழுகையின்போது) அல்லாஹ்வின் முன்னிலையில் உள்ளச்சத்துடன் நில்லுங்கள்."" (அல் பகரா : 238).

ஓர் அடியான் தனது சகோதரர்களுடன் சேர்ந்து கூட்டாகத் தொழாமல் அலட்சியப் படுத்தும் போது, அவன் அத்தொழுகையை கண்ணியப்படுத்தி பேணித் தொழுகிறான் என்பதை எவ்வாறு அறிய முடியும்? இறைவன் கூறுகிறான் : "தொழுகையைக் கடைப் பிடியுங்கள்; ஸகாத்தையும் (ஒழுங்காகக்) கொடுத்து வாருங்கள்; ருகூஃ செய்வோரோடு சேர்ந்து நீங்களும் ருகூஃ செய்யுங்கள்"". (அல் பகரா : 43).

கூட்டுத்தொழுகை அவசியம் என்பதையும், தொழுகையாளர்களுடன் அவர்களுடைய தொழுகையில் கூட்டுச் சேர்வதையும் இவ்வசனம் குறிப்பிட்டுக் கூறுகின்றது. தொழுகையை நிறைவேற்றுவது மாத்திரம்தான் நோக்கமாயிருந்தால் "ருகூ.்: செய்வோரோடு சேர்ந்து நீங்களும் ருகூ.்: செய்யுங்கள்"" என்று வசனத்தை முடிப்பதற்கான தக்க காரணம் எதுவுமில்லை. ஏனெனில் தொழுகையை நிறைவேற்றும்படி வசனத்தின் முதற்பகுதியில் ஏவியுள்ளான்.

மேலும் இறைவன் கூறுகிறான் : "(நபியே! போர் முனையில்) அவர்களுடன் நீர் இருந்து, அவர்களுக்கு தொழவைக்க நீர் ( இமாமாக) நின்றால் அவர்களில் ஒரு பிரிவினர் தம் ஆயுதங்களைத் தாங்கிக் கொண்டு உம்முடன் தொழட்டும்;. அவர்கள் உம்முடன் ஸஜ்தா செய்து (தொழுகையை முடித்ததும்) அவர்கள் (விலகிச் சென்று) உங்கள் பின்புறம் (உங்களைக் காத்து நிற்கட்டும்) அப்பொழுது, தொழாமலிருந்த மற்றொரு பிரிவினர் வந்து உம்முடன் தொழட்டும். ஆயினும் அவர்களும் தங்கள் ஆயுதங்களைத் தாங்கிய வண்ணம், தங்களைப் பற்றி எச்சரிக்கையாக இருக்கட்டும்"" (அந்நிஸா : 102).

போர்ச் சந்தர்ப்பத்திலேயே கூட்டாக தொழுகையை நிறைவேற்றும் படி ஏவியிருக்கின்றானென்றால் ( போரல்லாத) சமாதான(கால)த்திலே எவ்வாறு ( கூட்டுத் தொழுகையை விட முடியும்). கூட்டுத்தொழுகையில் யாராவது கடமை தவிர்த்தருளப்படுவாரானால் அதற்கு மிகவும் தகுதியானவர்கள் தாக்குதலைக் கொண்டு அச்சுறுத்தப்பட்ட, எதிரிகளுடன் (போரிட) அணிவகுத்து நிற்பவர்களே. அவர்களுக்கே ( அச்சலுகை) வழங்கப்படாத போது தொழுகையைக் கூட்டாக நிறைவேற்றுவது முக்கிய கடமைகளுள் ஒன்றென்பதும், அதைவிட்டும் பின்வாங்கக் கூடாதென்பதும் அறியப்பட்ட விடயமாகும்.

நபிமொழியில் பின்வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது : "என்னுடைய உயிர் எவனுடைய கரத்திலிருக்கிறதோ அந்த அல்லாஹ்வின் மீது ஆணையாக! விறகுகளைக் கொண்டு வருமாறு நான் கட்டளையிட்டு அதன் படி விறகுகள் கொண்டு வரப்பட்டு பின்னர் தொழுகைக்கு அழைக்குமாறு நான் உத்தரவிட்டு, அதன்படி அழைக்கப்பட்டு பின்னர்

ஒருவரை மக்களுக்குத் தொழுகை நடத்துமாறு கட்டளையிட்டு, அதன் படி அவர் தொழுகை நடத்தி பின்னர் தொழுகைக்கு வராமலிருக்கிற ஆண்களின் வீடுகளுக்குச் சென்று வீட்டோடு அவர்களை எரிப்பதற்கு நான் நினைத்ததுண்டு"". ( அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரழி). ஆதாரம்: புஹாரி 644).

மேலும் இப்னு மஸ்ஊத் ( ரழி) அவர்கள் கூறினார்கள் : "நான் பார்த்தவரை எங்களிடையே நயவஞ்சகர்களென ( வெளிப்படையாக) அறியப்பட்டவரையும், நோயாளியையும் தவிர வேறெவரும் ( கூட்டுத்) தொழுகையில் கலந்து கொள்ளாமல் இருந்ததில்லை. நோயாளிகூட இரு மனிதர்களுக்கிடையே ( தொங்கியவாறு) நடந்துவந்து தொழுகையில் சேர்ந்து விடுவார்."" (ஆதாரம் : முஸ்லிம் 654).

மேலும் கூறினார்கள் : "அல்லாஹ்வின் தூதர் ( ஸல்) அவர்கள் எங்களுக்கு நேரிய வழிகளைக் கற்பித்தார்கள். தொழுகை அறிவிப்புச் செய்யப்படும் பள்ளிவாசலில் தொழுவது அத்தகைய நேர்வழிகளிலொன்றாகும்.""

மேலும் ( இப்னு மஸ்ஊத் ( ரழி) அவர்கள்) கூறினார்கள் : "யார் நாளை ( மறுமை நாளில்) முஸ்லிமாக அல்லாஹ்வைச் சந்திக்க விரும்புகிறாரோ அவர் தொழுகை அறிவிப்புச் செய்யப்படும் இடங்களில் (பள்ளிவாசல்களில்) இந்தத் தொழுகையைப் பேணி(த் தொழுது) வரட்டும். ஏனெனில் அல்லாஹ் உங்கள் நபி முஹம்மத் ( ஸல்) அவர்களுக்கு நேரியவழிகளைக் காட்டியுள்ளான், (கூட்டுத்) தொழுகைகள் நேரியவழிகளில் உள்ளவையாகும். கூட்டுத் தொழுகையில் கலந்து கொள்ளாமல் தமது வீட்டிலேயே தொழுது கொள்ளும் இன்ன மனிதரைப் போன்று நீங்களும் உங்களது வீடுகளிலேயே தொழுது வருவீர்களானால் நீங்கள் உங்கள் நபியின் வழிமுறைகளைக் கைவிட்டவராவீர்கள். உங்கள் நபியின் வழிமுறைகளை நீங்கள் கைவிட்டால் நிச்சயம் நீங்கள் வழிதவறி விடுவீர்கள்.

யார் அங்கத்தூய்மை ( வுழூ) செய்து அதைச் செம்மையாகவும் செய்து, பின்னர் இப்பள்ளிவாசல்களில் ஒன்றை நோக்கி வருகிறாரோ அவர் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடிக்கும் அவருக்கு அல்லாஹ் ஒரு நன்மை

எழுதுகிறான், அவருக்கு ஒரு தகுதியை உயர்த்துகிறான். அவருடைய பாவங்களில் ஒன்றை மன்னித்து விடுகிறான். நான் பார்த்தவரை எங்களிடையே நயவஞ்சகர்களென (வெளிப்படயாக) அறியப்பட்டவரையும், நோயாளியையும் தவிர வேறெவரும் (கூட்டுத்) தொழுகையில் கலந்து கொள்ளாமல் இருந்ததில்லை. (எங்களில் நோயாளியான) ஒருவர் இரு மனிதர்களுக்கிடையில் தொங்கியவாறு அழைத்து வரப்பட்டு (கூட்டுத்) தொழுகையில் நிறுத்தப்பட்டதுண்டு.""

மேலும் நபி (ஸல்) அவர்களிடம் பார்வையற்ற ஒரு மனிதர் வந்து "அல்லாஹ்வின் தூதரே! என்னைப் பள்ளிவாசலுக்கு அழைத்து வரக்கூடிய வழிகாட்டி எவரும் எனக்கில்லை"" எனக்கூறி வீட்டிலேயே தொழுது கொள்ள அனுமதியளிக்குமாறு கோரினார். அப்போது நபி (ஸல்) அவர்கள் : "தொழுகை அறிவிப்புச் சத்தம் உமக்குக் கேட்கிறதா?"" என்று கேட்டார்கள். அவர் : ஆம் (கேட்கிறது) என்றார். நபி (ஸல்) அவர்கள் : "அப்படியானால் நீர் அதற்கு செவிசாய்ப்பீராக"" (கூட்டுத் தொழுகையில் வந்து கலந்து கொள்வீராக) என்று கூறினார்கள். (அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரழி). ஆதாரம் : முஸ்லிம் 653)

கூட்டுத்தொழுகையின் அவசியத்தையும், (அத்தொழுகைகளை) அல்லாஹ்வுடைய பெயர் கூறப்பட வேண்டுமென்றும் கண்ணியம் உயர்த்தப்பட வேண்டுமென்றும் அல்லாஹ் கட்டளையிட்ட அவனது இல்லங்களில் நிறைவேற்றுவதன் அவசியத்தையும் எடுத்துக் காட்டும் நபிமொழிகள் ஏராளமாக வந்துள்ளன.

இவ்விடயத்தில் கரிசனையெடுத்து, அதன் பக்கம் விரைந்து செயல்படுத்தி, தன்னுடைய மனைவிமக்கள் அண்டைவீட்டார் ஏனைய சகோதர முஸ்லிம்களுக்கு அதனைக் கொண்டு உபதேசம் செய்வது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அவசியமாகும்.

அல்லாஹ்வுடைய மற்றும், அவனுடைய தூதருடைய கட்டளையை பின்பற்றி, அவ்விருவரும் தடுத்தவற்றிலிருந்து தவிர்ந்து கொண்டு, அல்லாஹ் மோசமான பண்புகளைக் கொண்டு வர்ணித்த நயவஞ்சகர்களை விட்டும் தூரமாவதற்காக இக்கூட்டுத் தொழுகையில் கவனமெடுக்க வேண்டும். (அல்லாஹ் வர்ணித்த அவர்களின் பண்புகளில்) மிகத் தீயது

தொழுகையில் அவர்கள் சோம்பலாயிருப்பதுதான். இறைவன் கூறுகிறான் : ''நிச்சயமாக இந்நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை வஞ்சிக்க நினைக்கின்றனர். ஆனால் அவன் அவர்களை வஞ்சித்துவிடுவான். தொழுகைக்கு அவர்கள் தயாராகும் பொழுது சோம்பலுடையோராகவே நிற்கிறார்கள் - மனிதர்களுக்குத் ( தங்களையும் தொழுகையாளியாக்கி) காண்பிப்பதற்காக (நிற்கிறார்கள்). இன்னும், மிகச் சொற்ப அளவேயன்றி அவர்கள் அல்லாஹ்வை நினைவு கூர்வதில்லை. இந்த முனாஃபிக்குகள் முஃமின்களின் பக்கமுமில்லை, காஃபிர்களின் பக்கமுமில்லை. இரு பிரிவினர்களுக்கிடையே தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்;. அல்லாஹ் எவரை வழி தவறச் செய்துவிட்டானோ, அவருக்கு ( நபியே!) யாதொரு வழியையும் நீர் காணமாட்டீர்."" (அந்நிஸா : 142, 143).

மேலும் தொழுகையை முற்றுமுழுதாக விடுவதற்கான பிரதான காரணங்களில் ஒன்று அதனைக் கூட்டாகத் தொழுவதிலிருந்து பின்வாங்குவதாகும். நபியவர்களின் ( பின்வரும்) கூற்றுகளுக்கேற்ப தொழுகையை விடுவது இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றக்கூடிய வழிகேடும் இறைநிராகரிப்புமாகும் :

''நிச்சயமாக மனிதனுக்கும் இணைவைப்பு மற்றும் இறைமறுப்பு ஆகியவற்றிற்கிடையே (பாலமாக இருப்பது) தொழுகையை விடுவதுதான்"" (அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரழி). ஆதாரம் : முஸ்லிம் 82).

மேலும் ( நபியவர்கள்) கூறினார்கள்: ''(முஸ்லிம்களாகிய) எங்களுக்கும் (காபிர்களாகிய) அவர்களுக்கும் இடையிலுள்ள உடன்படிக்கை தொழுகையாகும். யார் அதை விட்டு விடுகிறாரோ அவர் இறைநிராகரிப்பாளர் ஆவார்"". ( அறிவிப்பவர் : புரைதா ( ரழி). ஆதாரம் : திர்மிதி 2621).

தொழுகையை மகத்துவப்படுத்தி, அதனைப் பேணி, அல்லாஹ் மார்க்கமயமாக்கியபடி அதனை நிறைவேற்றுவதும், அதனை விடுவதிலிருந்து எச்சரிப்பதும் பற்றி வந்துள்ள இறைவசனங்களும் நபி மொழிகளும் அதிகம் இடம் பெற்றுள்ளன. அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் வழிப்படுவதற்காகவும், அவனுடைய கோபம் மற்றும் வேதனையின் கொடுமையை விட்டும் தவிர்ந்து கொள்வதற்காகவும்,

தொழுகையை அதனுடைய நேரத்தில் பேணி அல்லாஹ் மார்க்கமயமாக்கியபடி நிலைநாட்டுவதும், மஸ்ஜித்களில் தன் சகோதரர்களுடன் அதனை நிறை வேற்றுவதும் ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும்.

எப்போது சத்தியம் வெளிப்பட்டு அதன் ஆதாரங்கள் தெளிவாகிவிட்டதோ (அதிலிருந்து) யாரும் பிறரின் கூற்றுக்காக நெறிதவற முடியாது. ஏனெனில் அல்லாஹ் கூறுகிறான் : "உங்களில் ஏதாவது ஒரு விஷயத்தில் பிணக்கு ஏற்படுமானால் - மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்புபவர்களாக இருப்பின் - அதை அல்லாஹ்விடமும், (அவன்) தூதரிடமும் ஒப்படைத்துவிடுங்கள் - இதுதான் (உங்களுக்கு) மிகவும் சிறப்பான, அழகான முடிவாக இருக்கும்."" (அந்நிஸா : 59).

மேலும் கூறுகிறான் : "ஆகவே எவர், அவருடைய கட்டளைக்கு மாறு செய்கிறார்களோ அவர்கள் தங்களை சோதனை பிடித்துக் கொள்வதையோ, அல்லது தங்களை நோவினை தரும் வேதனை பிடித்துக் கொள்வதையோ அஞ்சிக் கொள்ளட்டும்."" (அந்நூர் : 63).

கூட்டுத் தொழுயைலிருக்கும் ஏராளமான பயன்களும் நலவுகளும் (யாரை விட்டும்) மறைய மாட்டாது. ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்வது, நன்மையிலும் பயபக்தியிலும் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வது, சத்தியத்தைக் கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசம் செய்வது, அதில் ( ஏற்படும் துன்பங்களுக்காக) பொறுமை கொள்வது, (கூட்டுத் தொழுகையை விட்டும்) பின்வாங்குபவரை ஊக்கப்படுத்துவது, (அது பற்றி) அறியாதவருக்குக் கற்றுக்கொடுப்பது, நயவஞ்சகர்களை சீற்றமடையச் செய்வது, அவர்களின் வழியைவிட்டும் தூரமாவது, இறைமார்க்க அடையாளங்களை அவனுடைய அடியார்களுக்கு மத்தியில் வெளிப்படுத்துவது, அவனின் பக்கம் சொல்லாலும் செயலாலும் அழைப்பது, போன்று இன்னும் ஏராளமான பயன்கள் கிடைக்கின்றன.

அல்லாஹ்வினுடைய பொருத்தத்தின் பக்கமும், ஈருலக நலவின் பக்கமும் அவன் எனக்கும் உங்களுக்கும் அனுகூலம் புரிவானாக. எங்களுடைய ஆத்மாக்களின் கெடுதி, எங்களுடைய கெட்ட செயற்கள்,

இறை நிராகரிப்பாளர்கள், நயவஞ்சகர்களுக்கு ஒப்பாதல் ஆகியவற்றைவிட்டும் அவன் எங்களைப் பாதுகாப்பானாக. அவன் கண்ணியமிக்க கொடையாளன்.

உங்கள் மீது அல்லாஹ்வுடைய சாந்தி, அருள், அபிவிருத்தி உண்டாகட்டுமாக! எங்கள் நபி முஹம்மத் ( ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் கிளையார் தோழர்கள் மீதும் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக.

# இசை

தொகுப்பு : அஷ்ஷேஹ் அப்துல் அஸீஸ் பின் அப்தில்லாஹ் பின் பாஸ் (ரஹ்) அவர்கள்

நிச்சயமாக இசையுடன் கலந்த பாடல்களை செவி மடுப்பது (இஸ்லாத்தில்) தடுக்கப்பட்ட ஒன்றாகும். மேலும் உளவியல் நோய்கள், வந்நெஞ்சம், மற்றும் தொழுகை, திக்ரு போன்றவற்றை விட்டும் தடுத்தல் போன்றவைகளுக்கு (இப்பாடல்கள்) காரணமாக அமைகின்றன. அநேகமான மார்க்க அறிஞர்கள் "(இவர்கள் தவிர) மனிதர்களில் சிலர் இருக்கின்றார்கள் - அவர்கள் அறிவில்லாமல் வீணான பேச்சுக்களை விலைக்கு வாங்கி, (அவற்றால் மக்களை) அல்லாஹ்வின் பாதையிலிருந்து வழி கெடுக்கவும், இறைபாதையைப் பரிகாசிக்கவும் ( முயல்கிறார்கள்)"" (லுக்மான் : 6) என்ற இறைவசனத்தில் வரும் "வீணான பேச்சுக்கள்"" என்பது இசைதான் என்று விளக்கமளித்துள்ளனர். இப்னு மஸ்ஊத் ( ரழி) அவர்கள் "வீணான பேச்சுக்கள்"" என்பது இசைதான் என்று சத்தியமிட்டுக் கூறுபவராக இருந்தார்கள். பாடலுடன் சேர்த்து வீணை, வயலின், மத்தளம், முரசு போன்ற இசைக்கருவிகளும் இருந்தால் அது கடுமையாகத் தடைசெய்யப்பட்டதொன்றாக மாறிவிடும்.

இசைக்கருவிகளுடன் சேர்த்து பாடல்கள் பாடுவது தடுக்கப்பட்டது (ஹராம்) என்பது ஏகோபித்த ( இஜ்மா.ஃ) முடிவாகுமென சில அறிஞர்கள் கூறியுள்ளனர். எனவே அதைவிட்டும் தவிர்ந்து கொள்வது கடமையாகும். நபிகளாரைத் தொட்டும் பின்வரும் ஆதார பூர்வமான செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. "என் சமுதாயத்தாரில் சில கூட்டத்தார் தோன்றுவார்கள். அவர்கள் விபசாரம் ( புரிவது), (ஆண்கள்) பட்டுத் துணி (அணிவது), மது (அருந்துவது), இசைக் கருவிகள் (இசைப்பது) ஆகியவற்றை அனுமதிக்கப்பட்டவையாகக் கருதுவார்கள்."" ( அறிவிப்பவர் : அபூ மாலிக் அல் அஷ்அரீ (ரழி). ஆதாரம் : புஹாரி 5590).

"இதாஅதுல் குர்ஆன்"" வானொலி அலைவரிசையையும், (அதில் ஒலிபரப்பப்படும்) "நூருன் அலத்தர்ப்"" என்ற ( கேள்வி- பதில்) நிகழ்ச்சி நிரலையும் அதிகமாகக் கேட்கும்படி அனைவருக்கும் உபதேசம்

செய்கின்றேன். அவ்விரண்டிலும் மகத்தான பயன்கள் இருப்பதோடு பாடல்கள், இசைகளைக் கேட்பதிலிருந்து அது திருப்புமுனையாகவும் அமையும்.

திருமணவிழாக்களில், அதனைப் பகிரங்கப்படுத்தவும், விபசாரத்தை விட்டும் ( அதனை) வேறுபடுத்தவும், தடுக்கப்பட்ட கருத்துக்களடங்காத பாடல்களுடன் தப்ஸ் ( ஒரு பக்கம் வெட்டப்பட்ட சிறுமுரசு) அடிப்பது, இரவின் சிலநேரங்களில் பெண்களுக்கு மாத்திரம் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி நபியவர்களைத் தொட்டும் ஆதார பூர்வமான நபிமொழிகள் வந்துள்ளன.

திருமணவிழாக்களில் மேளம் ( இருபக்கங்களும் மூடப்பட்ட முரசு) கொட்டுவது கூடாது. ( மாறாக தப்ஸ் அடிப்பதுடன் ( மாத்திரம்) போதுமாக்கிக் கொள்ள வேண்டும். திருமண அறிவிப்பின் போது ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதோ, பொதுவான பாடல்களைப் பாடுவதோ கூடாது. (அவ்வாறு உபயோகப் படுத்துவதாலும், பாடுவதாலும்) கெடுதிவிளைவிக்கும் பல குழப்பங்கள், பாதகமான பல முடிவுகள் மற்றும் (ஏனைய) முஸ்லிம்களுக்கு நோவினை செய்தல் போன்ற ( விளைவுகள்) ஏற்படுவதனாலேயே (அவை தடுக்கப்பட்டுள்ளன).

மேலும் (தப்ஸ் அடிப்பதில்) அதிக நேரம் செலவிடக்கூடாது. மாறாக திருமணத்தை அறிவிப்பதற்குப் போதுமான நேரம் ( அடித்து விட்டு அதனுடன்) போதுமாக்கிக் கொள்ள வேண்டும். ஏனெனில் ( அதில்) அதிக நேரம் செலவிடுவது உறக்கம் மற்றும் பஜ்ர் தொழுகையை அதற்குரிய நேரத்தில் நிறைவேற்றாமல் வீணடிப்பதற்கு வழிவகுக்கின்றது. அது பெரும் பாவங்களில் உள்ளதுடன் நயவஞ்சகரின் செயற்களிலுள்ளதுமாகும்.

ஸலபுஸ்ஸாலிஹீன் எனப்படும் முன்னோர்களுடைய கூற்றுக்களிலிருந்து இசை தடுக்கப்பட்டதற்கான சில ஆதாரங்கள் வருமாறு :

- அபூ பக்ர் (ரழி) அவர்கள் கூறினார்கள் : "பாட்டுப் பாடுதல் பியானோ வாசித்தல் ஆகியன ஷைத்தானின் புல்லாங்குழலாகும்"".
- இமாம் மாலிக் பின் அனஸ் (ரஹ்) அவர்கள் கூறினார்கள் : "(தப்உத் தாபிஈன்களாகிய) எங்களிடத்திலே கெட்டவர்கள்தான் இசைகளைப் பயன்படுத்துவார்கள்"".
- ஷாபிஈ மத்ஹபைச் சேர்ந்தவர்கள் இசையை வீணான மிக மோசமான செயலுக்கு ஒப்பாக்கின்றார்கள்.
- இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்கள் கூறினார்கள் : "இசை உள்ளத்திலே நயசஞ்சகத்தை விதைக்கின்றது. எனவே அது எனக்கு விருப்பமில்லை"".
- இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்களின் மாணவர்கள் கூறினார்கள் : "இசை கேட்பது பாவச்செயலாகும்"".
- கலீபா உமர் பின் அப்தில் அஸீஸ் (ரஹ்) அவர்கள் கூறினார்கள் : "இசையின் ஆரம்பம் ஷைத்தானாகும். அதனுடைய முடிவு இறைவனுடைய கோபமாகும்"".
- இமாம் குர்துபீ (ரஹ்) அவர்கள் கூறினார்கள் : "இசை அல்குர்ஆன் ஸுன்னா அடிப்படையில் தடுக்கப்பட்டதாகும்"".
- இமாம் இப்னுஸ் ஸலாஹ் ( ரஹ்) அவர்கள் கூறினார்கள் : "இசைக்கருவிகளுடன் சேர்த்துப் பாடுவது ஹராமாகும் என்பது ஏகோபித்த முடிவாகும்"".

# உருவம் வரைதல்

பதிலளிப்பவர் : அஷ்ஷேஹ் அப்துல் அஸீஸ் பின் அப்தில்லாஹ் பின் பாஸ் (ரஹ்) அவர்கள்

**கேள்வி** : ( இன்று) கடுமையான சோதனையாகப் பரவிவிட்டதும், மக்கள் முற்றிலும் ஈடுபடக்கூடியதுமாகிய உருவப்படம் வரைவதில் உங்கள் கருத்து என்ன?

**பதில்** : மனிதனையோ அல்லது வேறு உயிருள்ளவைகளையோ வரைவது கூடாதென்பதைப் பறை சாற்றும் அநேகமான நபிமொழிகள் பலதரப்பட்ட ஹதீஸ் கிரந்தங்களில் இடம்பெற்றுள்ளன. மேலும் உருவப்படமுள்ள திரைச் சீலைகளைக் கிழிப்பது, உருவப் படங்களை அழிப்பது, உருவப்படம் வரைபவர்களை சபிப்பது, அவர்கள்தான் மறுமையில் கடுமையான வேதனைக்கு உரியவர்கள் என்பவைகளைத் தெளிவு படுத்தக்கூடிய ( ஏராளமான ஹதீஸ்கள் இடம்பெற்றுள்ளன). இதுபற்றி வந்திருக்கும் ஆதாரபூர்வமான சில நபிமொழிகளை உங்களுக்கு நான் கூறுகிறேன். மேலும் அதுபற்றி அறிஞர்களின் சில கூற்றுக்களையும் கூறி, இதில் பலமான கருத்தையும் இன்ஷாஅல்லாஹ் தெளிவுபடுத்துகிறேன்.

இறைத்தூதர் ( ஸல்) அவர்கள் கூறினார்கள் : "அல்லாஹ் தஆலா கூறுகிறான் என் படைப்பைப் போன்று படைக்க எண்ணுபவனை விடப் பெரிய அக்கிரமக்காரன் யார் இருக்க முடியும்? இவர்கள் ஓர் அணுவைப் படைத்துக் காட்டட்டும். அல்லது ஒரு தானிய வித்தையேனும் அல்லது ஒரு வாற்கோதுமையையேனும் படைத்துக் காட்டட்டும்"". ( அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரழி). ஆதாரம் : புஹாரி 7559 முஸ்லிம் 2111 இவ்வாக்கியம் முஸ்லிம் கிரந்தத்திற்குரியதாகும்).

இறைத்தூதர் ( ஸல்) அவர்கள் கூறினார்கள் : "அல்லாஹ்விடம் மறுமை நாளில் மிகக் கடுமையான வேதனைக்குள்ளாவோர் உருவங்களைப் படைப்போர் தாம்"" (அறிவிப்பவர் : இப்னு மஸ்ஊத் (ரழி). ஆதாரம் புஹாரி 5950 முஸ்லிம் 2109).

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ''இந்த உருவங்களைப் படைப்போர் மறுமை நாளில் வேதனை செய்யப்படுவார்கள். அவர்களிடம், 'நீங்கள் படைத்தவற்றுக்கு உயிர் கொடுங்கள் (பார்க்கலாம்)'' என (இடித்து)க் கூறப்படும்''. ( அறிவிப்பவர் இப்னு உமர் ( ரழி). ஆதாரம் : புஹாரி 5951 முஸ்லிம் 2107 இவ்வசனம் புஹாரிக் கிரந்தத்திற்குரியதாகும்).

இறைத்தூதர் ( ஸல்) அவர்கள் இரத்தத்தின் விலையையும், நாய்விற்ற காசையும், விபசாரியின் ஊதியத்தையும் ( ஏற்கக் கூடாதென்று) தடை செய்தார்கள். மேலும், வட்டி ( வாங்கி) உண்பவனையும் வட்டி உண்ணக் கொடுப்பவனையும், பச்சை குத்தி விடுபவளையும் பச்சை குத்திக் கொள்பவளையும், உருவப் படங்களை வரைகிறவனையும் சபித்தார்கள். (அறிவிப்பவர் அபூ ஜுஹைபா (ரழி). ஆதாரம் : புஹாரி 5962).

இப்னு அப்பாஸ் (ரழி), ''உலகில் ஓர் உருவப் படத்தை வரைகிறவர் மறுமை நாளில் அந்த உருவத்தினுள் உயிரை ஊதும்படி பணிக்கப்படுவார். ஆனால், அவரால் ஊத முடியாது'' என்று முஹம்மத் (ஸல்) அவர்கள் சொல்லக் கேட்டேன் எனக் கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி 5963 முஸ்லிம் 2110).

ஸாஃத் பின் அபில் ஹஸன் (ரஹ்) அவர்கள் கூறினார்கள் : இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து ''நான் இந்த உருவங்கள் வரை(யும் தொழில் செய்து வரு)கிறேன். இதைப்பற்றி எனக்கு மார்க்கத் தீர்ப்பளியுங்கள்'' என்று கேட்டார். இப்னு அப்பாஸ் ( ரழி) அவர்கள் ''எனக்கருகில் வா'' என்றார்கள். அவர் அருகில் வந்தார். பிறகு ( மீண்டும்) ''இன்னும் அருகில் வா'' என்றார்கள். அவர் இன்னும் அருகில் வந்தபோது, அவரது தலையில் கையை வைத்து ''அல்லாஹ்வின் தூதர் ( ஸல்) அவர்களிடமிருந்து நான் செவியுற்ற ஒரு செய்தியை உமக்குச் சொல்கிறேன். அல்லாஹ்வின் தூதர் ( ஸல்) அவர்கள் ''உருவங்களைப் படைக்கும் ஒவ்வொருவரும் நரகத்திற்கே செல்வர். அவர் படைத்த ஒவ்வோர் உருவத்திற்கும் அல்லாஹ் உயிர் கொடுப்பான். அதுவே அவரை நரகத்தில் வேதனை செய்யும்'' என்று கூறியதை நான் கேட்டுள்ளேன்'' என்றார்கள். மேலும் ''நீ வரைந்து தான் ஆக வேண்டுமென்றால் மரங்கள்,

உயிரற்ற ( இயற்கைக் காட்சிகள் உள்ளிட்ட)வற்றின் படங்களை வரைந்து கொள்"" என்று கூறினார்கள் (ஆதாரம் : முஸ்லிம் 2110).

இமாம் புஹாரி ( ரஹ்) அவர்கள் "நீ வரைந்துதான் ஆக வேண்டுமென்றால்…"" என்ற வசனத்திலிருந்து இறுதிவரை, அதற்கு முன்னுள்ள நபிமொழியின் இறுதியில், இமாம் முஸ்லிம் கூறியதுபோன்றே அறிவித்துள்ளார்கள்.

# தாடி சிரைப்பது கூடாது

தொகுப்பு : அஷ்ஷேஹ் முஹம்மத் பின் ஸாலிஹ் அல் உஸைமீன் (ரஹ்) அவர்கள்

தாடி சிரைப்பது தடுக்கப்பட்டதாகும் ( ஹராம்). ஏனெனில் அது இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு மாறு செய்வதாகும். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "தாடியை வளரவிடுங்கள். மீசையை ஒட்ட நறுக்குங்கள்"" (அறிவிப்பவர் : இப்னு உமர் (ரழி). ஆதாரம் : முஸ்லிம் 256). மேலும் அ(வ்வாறு சிரைப்ப)து இறைத் தூதர்களுடைய வழியைவிட்டும் வெளியாகி நெருப்பு வணங்கிகள், இணை வைப்பவர்களுடைய வழியின்பால் செல்வதாகும். முகம், இரு தாடைகள் மற்றும் இரு கன்னங்களில் ( வளரும்) முடியே தாடியென ( அரபு) மொழியறிஞர்கள் வரையறுத்துள்ளனர். அதாவது இரு கன்னங்கள், தாடைகள், நாடி ஆகியவற்றில் ( வளரும்) அனைத்து((முடிகளு)ம் தாடியாகும். அதிலிருந்து சிறிதேனும் அகற்றுவது பாவச்செயலாகும். ஏனெனில் இதுபற்றி நபி (ஸல்) அவர்களைத் தொட்டும் நான்கு விதமான அறிவிப்புக்கள் வந்துள்ளன. இவையனைத்தும் தாடியிலிருந்து சிறு பகுதியேனும் எடுக்கக்கூடாது என்பதையே பறை சாற்றுகின்றன. எனினும் பாவங்கள் வேறுபடலாம். அவற்றில் சிரைப்பது ( கத்தரிப்பதை விட) பெரியபாவமாகும். ஏனெனில் (அந்த தாடியிலிருந்து) சிறிதளவு எடுப்பதை விட சிரைப்பது கடுமையானதும் தெளிவானதுமான மாற்றமாகும்.

# ஆண்கள் ஆடையைத் தொங்கவிடல்

தொகுப்பு : அஷ்ஷேஹ் முஹம்மத் பின் ஸாலிஹ் அல் உஸைமீன் (ரஹ்) அவர்கள்

கணுக்காலுக்குக் கீழ் ஆடையைத் தொங்கவிடுவதன் மூலம் பெருமை நாடப்பட்டால் அதற்குரிய தண்டனை, அல்லாஹ் மறுமையில் அ(வ்வாறு ஆடையணிப)வரைப் பார்க்கவோ, அவருடன் பேசவோ, அவரைத் தூய்மைப் படுத்தவோ மாட்டான். மாறாக அவனுக்குத் துன்பம் தரும் வேதனையுண்டு.

அதன்மூலம் பெருமை நாடப் படவில்லையானால் அதற்குரிய தண்டனை கணுக்காலுக்குக் கீழால் ஆடையிறங்கிய பகுதி நெருப்பால் தண்டிக்கப்படும்.

நபி ( ஸல்) அவர்கள் கூறினார்கள் : ''மூன்று பேரிடம் மறுமை நாளில் அல்லாஹ் பேசவுமாட்டான், அவர்களை ஏறெடுத்துப் பார்க்கவும் மாட்டான், அவர்களைத் தூய்மைப் படுத்தவும் மாட்டான். அவர்களுக்குத் துன்பம் தரும் வேதனைதான் உண்டு: தமது ஆடையை (கணுக்காலுக்கு)க் கீழே இறக்கிக் கட்டியவர். (செய்த உபகாரத்தைச்) சொல்லிக் காட்டுபவர். பொய்ச்சத்தியம் செய்து தனது பொருட்களை விற்பனை செய்பவர்."" (அறிவிப்பவர் : அபூ தர் (ரழி). ஆதாரம் : முஸ்லிம் 106).

மேலும் நபி ( ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''தன் ஆடையைத் தற்பெருமையின் காரணத்தால் ( பூமியில் படும்படி கீழே தொங்கவிட்டு) இழுத்துக் கொண்டு செல்கிறவனை அல்லாஹ் மறுமையில் ஏறிட்டும் பார்க்க மாட்டான்"" (அறிவிப்பவர் : இப்னு உமர் (ரழி). ஆதாரம் : புஹாரி 3665). இது பெருமைக்காகத் தனது ஆடையை ( த் தரையுடன்) இழுத்துச் சென்றவர் விடயத்தில் (வந்த நபிமொழி).

பெருமை நாடப்படவில்லையானால் அதுபற்றி ஸஹீஹ{ல் புஹாரியில் ( பின்வரும் நபிமொழி) இடம்பெற்றுள்ளது: ''கணுக்கால்களுக்குக் கீழே தொங்கும் ( வகையில்) கீழங்கி(யை அணிகிறவர்) நரகத்தில் ( புகுவார்)"". ( அறிவிப்பவர் : அபூ ஹுரைரா ( ரழி).

ஆதாரம் : புஹாரி 5787). ( இந்நபிமொழி) பெருமையைக் கொண்டு வரையறுக்கப்படவில்லை. முந்தைய நபிமொழியில் ( கூறப்பட்ட) பெருமையின் அடிப்படையில் ( இதனையும்) பெருமையைக் கொண்டு வரையறுப்பது தெளிவாகமாட்டாது. ஏனெனில் அபூ ஸஈத் அல்குத்ரீ (ரழி) அவர்கள் நபியவர்கள் கூறியதாகக் கூறினார்கள் : "ஒரு முஸ்லிமுடைய கீழாடை கெண்டைக்காலின் பாதிவரை இருக்க வேண்டும். அல்லது கெண்டைக் காலுக்கும் கணுக் கால்களுக்கும் இடையில் இருந்தால் அதில் தவறேதுமில்லை. கணுக்கால்களுக்குக் கீழ்ச் செல்பவையே நரகத்திற்கு (அழைத்து)ச் செல்லும். யார் தனது கீழாடையை ஆணவத்துடன் இழுத்துச் செல்கிறாரோ அவரை அல்லாஹ் பார்க்க மாட்டான்."" (ஆதாரம் : மாலிக், அபூ தாவூத், நஸாஈ, இப்னு மாஜா, இப்னு ஹிப்பான். ( இமாம் இப்னு ஹிப்பான்) அவர்கள் இதனை "ஆர்வமூட்டலும் எச்சரித்தலும்"" எனும் பாடத்தில் - "கமீஸ்"" அணிவதில் ஆர்வமூட்டல்- எனும் பகுதியில் கூறியுள்ளார்கள்.) (பாகம் 3, பக்கம் 88).

மேலும் இ(வ்வி)ரு செயற்களும் வேறுபாடானது, இரு தண்டனைகளும் வேறுபாடானது. சட்டமும் காரணமும் வேறுபடக் கூடியதில் முரண்பாடு ஏற்படுவதால் ( பெருமையைக் குறிப்பிடப்படாமல்) பொதுவாக வந்ததை ( பெருமையால்) வரையறுக்கப்பட்டதன் மீது சுமத்த முடியாது.

அபூ பக்ர் ( ரழி) அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்ட நபிமொழியை (கரண்டைக் காலுக்குக் கீழ் ஆடையணியலாம் என்பதற்கு) ஆதாரமாகக் காட்டுபவர்களுக்கு நாம் கூறிக்கொள்வதாவது: அதிலே உங்களுக்கு ஆதாரம் கிடையாது. (அதை) இரு விதங்களில் (விளக்கலாம்):

1. அபூ பக்ர் ( ரழி) அவர்கள் கூறினார்கள் : "நான் கவனமாக இல்லாவிட்டால் என்னுடைய ஆடையின் ஒரு பக்கம் கீழே தொங்கி விடுகிறது"" (புஹாரி 3665). அவர்கள் பெருமையின் காரணமாக (அவ்வாறு) தனது ஆடையைத் தொங்கவிடவில்லை. மாறாக அது தானாகத் தொங்கிக் கொண்டிருந்தது. அவர்கள் அதனைக் கவனித்து (உயர்த்தி)க் கொள்வார்கள்.

பெருமையின்றி வேண்டுமென்றே தங்களுடைய ஆடையைத் தொங்க விடுபவர்களுக்கு நாம் கூறிக் கொள்வதாவது: நீங்கள்

பெருமையின்றி வேண்டுமென்றே கரண்டைக்காலுக்குக் கீழ் ஆடைகளை இறக்கினீர்களானால் ( அவ்வாடையின்) கீழிறங்கிய பகுதிக்காக மாத்திரம் நீங்கள் வேதனை செய்யப்படுவீர்கள். நீங்கள் உங்களுடைய ஆடைகளைப் பெருமைக்காக இழுத்துச் சென்றீர்களானால் ( ஏற்கனவே) சொல்லப்பட்ட வேதனையை விட கடுமையாக வேதனை செய்யப்படுவீர்கள். ( அதாவது) மறுமையில் அல்லாஹ் உங்களுடன் பேசவோ, உங்களைப் பார்க்கவோ, தூய்மைப் படுத்தவோ மாட்டான். ( மாறாக) உங்களுக்குத் துன்பம் தரும் வேதனையுண்டு.

2. நிச்சயமாக அபூ பக்ர் (ரழி) அவர்களை நபியவர்கள் (அவர்கள்) பெருமைக்காக அவ்வாறு செய்பவரல்லர் என்று தூய்மைப் படுத்தி நற்சான்று பகர்ந்தார்கள். இ(வ்வாறு பெருமையில்லாமல் ஆடையைத் தொங்கவிடுவது கூடுமென்ப)வர்களில் யாருக்காவது இந்நற்சான்று உள்ளதா? எனினும் ஷைத்தான் சிலருக்கு, அல்குர்ஆனிலும் நபிமொழிகளிலும் உள்ள (பல அந்தரங்கங்களைக் கொண்ட) முதஷாபிஹ் எனும் பகுதியைப் பின்பற்ற வழிகாட்டி விடுகின்றான்.

# புகை பிடித்தல்

தொகுப்பு : அஷ்ஷேஹ் முஹம்மத் பின் ஸாலிஹ் அல் உஸைமீன் (ரஹ்) அவர்கள்

புகை ( சிகரட்) பிடித்தல் மற்றும் கஞ்சா ( பாவித்தல்) என்பவற்றினுடைய சட்டங்களை ஆதாரத்துடன் விளக்குமாறு தங்களிடம் வேண்டுகிறேன்.

புகை ( சிகரட்) பிடிப்பதும் கஞ்சா பாவிப்பதும் ஹராமாக்கப்பட்ட (இஸ்லாத்தில் தடுக்கப்பட்ட)தாகும். அதற்குரிய ஆதாரமாக(ப் பின்வரும்) இறைவசனங்கள் அமைகின்றன: ''நீங்கள் உங்களையே கொலை செய்து கொள்ளாதீர்கள் - நிச்சயமாக அல்லாஹ் உங்களிடம் மிக்க கருணையுடையவனாக இருக்கின்றான்"". ( அந்நிஸா : 29). மேலும் அல்லாஹ் கூறுகிறான்: ''இன்னும் உங்கள் கைகளாலேயே உங்களை அழிவின்பக்கம் கொண்டு செல்லாதீர்கள்;"". (அல் பகறா : 195). இ(ந்தப் புகை, கஞ்சா போன்ற)வற்றைப் பயன் படுத்துவது ( உடல் நலத்திற்குக்) கேடு விளைவிக்கக்கூடியதென வைத்திய ரீதியாக உறுதியாகி விட்டது.

மேலும் ''(அநாதைகளின் பொருளுக்கு நீங்கள் மேலாளராக ஏற்பட்டால்) அவர்கள் புத்தி குறைவானவர்களாக இருப்பின் (வாழ்க்கைக்கு) ஆதாரமாக அல்லாஹ் உங்களிடம் ஆக்கித் தந்த செல்வத்தை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம்"" ( அந்நிஸா : 5) என்ற இறைவசனமும் மற்றோர் ஆதாரமாக அமைகின்றது.

புத்தி குறைவானவர்களுக்கு எங்களுடைய சொத்துக்களைக் கொடுக்க வேண்டாம் எனத் தடுத்துள்ளான். ஏனெனில் அவர்கள் அதனை வீண்விரயம் செய்து அழித்துவிடுவார்கள். புகை ( சிகரட்), கஞ்சா போன்வற்றை வாங்க பணத்தை செலவிடுவது, வீண்விரயம் செய்து அதனை அழிப்பதென்பதில் எவ்வித ஐயமுமில்லை. எனவே இவ்வசனத்தின் ஆதார அடிப்படையில் அ(ப் புகை கஞ்சாவான)து தடுக்கப்பட்டதாகி விடும்.

நபிகளாரின் பொன்மொழியிலிருந்து (இதற்கு ஆதாரம்) : நிச்சயமாக நபி (ஸல்) அவர்கள் பணத்தை வீணடிப்பதைத் தடுத்துள்ளார்கள். மேலும் நபியவர்கள் கூறினார்கள் : "(யாருக்கும்) தீங்கிழைக்கவோ மேலும் (பிறர் இழைத்த) தீங்கிற்குப் பழிவாங்கவோ கூடாது"". இ(ந்தப் புகை, கஞ்சா போன்ற)வற்றைப் பயன்படுத்துவது தீங்கிற்கு வழிவகுக்கின்றது. மேலும் இப்பொருட்கள் மனிதனைத் தொடர்ந்து அவற்றினுடனேயே தொடர்புபட வழிவகுக்கின்றது. அது அவனுக்குக் கிடைக்காவிட்டால் அவனுடைய இதயம் சுருங்கிவிடுகின்றது. மேலும் உலகமே அவனுக்கு சுருங்கிவிடுகின்றது. எனவே அவன் தனக்குத் தேவையில்லாத (பயனற்ற வேறு) சில பொருட்களை தனக்குள் திணித்துக் கொள்கிறான்.

# அல்லாஹ்வை விசுவாசிக்கும் ரோஷமுள்ள அனைத்து தந்தைகளுக்கும்

# உள்ளத்திலிருந்தோர் உபதேசம்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "ஓர் ஆண் அடியானோ, பெண் அடிமையோ விபசாரம் செய்யும்போது அல்லாஹ்வைவிடக் கடுமையாக ரோஷம் கொள்பவன் யாருமில்லை"". ( அறிவிப்பவர்: ஆஇஷா ( ரழி). ஆதாரம் : புஹாரி 1044). அனைவரும் அல்லாஹ்வினுடைய அடியார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மேலும் நபி ( ஸல்) அவர்கள் கூறினார்கள் : "ஸஅத் அவர்களின் ரோஷத்தைக் கண்டு நீங்கள் வியக்கின்றீர்களா? அல்லாஹ்வின் மீதாணையாக! நான் அவரைவிட அதிக ரோஷமுள்ளவன்; அல்லாஹ் என்னைவிட ரோஷமுள்ளவன். அல்லாஹ் தன் ரோஷத்தின் காரணத்தால்தான் வெளிப்படையான மற்றும் மறைவான மானக்கேடான செயல்கள் ( ஆபாசங்கள்) அனைத்தையும் தடைசெய்துவிட்டான்"". ( அறிவிப்பவர் : முஃகீரா இப்னு ஷுஅபா (ரழி). ஆதாரம் : புஹாரி 7416).

ரோஷம் என்பது ( திருமணம் செய்யத்) தடுக்கப்பட்ட ( தனது) உறவுக்காரப் பெண்கள் விடயத்தில் மிகுந்த ஆர்வங்கொண்டு ( அவர்கள் விடயத்தில்) கோபங்கொள்வதும், வீணர்களுடைய கைகளிலிருந்தும் ( தீய நோக்குடன்) பார்ப்பவர்களின் கண்களிலிருந்தும் அவர்களைப் பாதுகாப்பதுமாகும். யாருக்கு ரோசம் இல்லையோ அவன் தனது குடும்பத்திலே விபசாரத்தை அனுமதிக்கும் ஒழுக்கம் இழந்தவனாவான். இ(து போன்ற)வன் சுவனம் நுழையமாட்டானென ( சில நபிமொழிகள்) வந்துள்ளன. இறைபக்தியுள்ள ஒவ்வொரு விசுவாசியும் தனது மனைவிமார், பெண்பிள்ளைகள், மேலும் தனது அனைத்து உறவுக்காரப் பெண்கள் விடயத்தில் ரோஷக்காரனாக இருப்பான் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அவர்களைக் கண்காணிப்பதும், அவர்களுடைய செய்திகளை உன்னிப்பாகக் கவனிப்பதும், ஆண்களுடன் ( பொது இடங்களில்) கலக்காமல் அவர்களைத் தடுப்பதும், உராய்வுகள் மற்றும் சனநெரிசல் அதிகமாகும் பொது நிகழ்ச்சிகளை விட்டும் அவர்களைத்

தடுப்பதும் இந்த ரோஷத்தின் வெளிப்பாடாகும். குறிப்பாக அது போன்ற இடங்களிலிருக்கும் அதிகமானவர்கள் கெட்ட உள்ளங் கொண்டோராகவே இருக்கின்றனர். உணர்ச்சிகளைத் தூண்டி, மற்றும் பலவீனமான ஈமானுள்ளவர்களைப் பாவங்களின் பக்கம் இட்டுச்செல்லும் பரிகாசங்கள், பூசல்கள், பெண்களை வர்ணிக்கும் கவிதைகள், கெட்ட வார்தைகள் (போன்றன அவ்விடங்களில்) அதிகரிக்கின்ற காரணத்தாலேயே (அப்பெண்களைத் தடுக்க வேண்டும்). அந்தப் பொதுச் சந்தைகளில் எத்தனை ஆட்கடத்தல்கள், சந்திப்பு நேரங்கள், தொலைபேசி அழைப்புகள், மறைவான பகிரங்கமான பேச்சுவார்தைகள் நடந்திருக்கின்றன? (இவற்றை விட்டும்) பெற்றோர் கவனக்குறைவாக, தமது பொறுப்புக்குக் கீழுள்ளவர்கள் பற்றி நல்லபிப்பிராயம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ( அங்கு) நடைபெற்றதில் பத்திலொன்றாவது அவர்களுடைய சிந்தனைக் கெட்டமாட்டாது.

தனது ( மஹ்ரமான) நெருக்கமான உறவுக்காரப் பெண்களுடன் கூடவே இருந்து, அவர்களைக் கவனித்துப் பாதுகாப்பதும், பாவச்செயற்களுடைய காரணிகளைவிட்டும் அவர்களைத் தடுப்பதும், ஊக்கமுள்ள ரோஷக்காரர் மீது கடமையாகும். மேலும் ஆபாசத் திரைப்படங்கள், கவர்ச்சியூட்டும் உருவப் படங்களைப் பார்ப்பது, உணர்ச்சிகளைத் தூண்டக்கூடியதும் ஹராத்தின் பக்கம் உந்தக் கூடியதுமான நாணமற்ற பாடல்களைக் கேட்பது ஆகியவற்றை விட்டும் (அவர்களைத் தடுப்பது கட்டாயமாகும்). அதே போன்று பொதுச் சந்தைகள், ஆஸ்பத்திரிகள், கல்லூரிக்குச் செல்லும் வழிகள் ஆகியவற்றில் ( அவர்கள் வகுப்பறையினுள் நுழையும்வரை) அவர்களுடன் கூடச் செல்வது எப்போதும் கடமையாகும். அவ்வாறே ( கல்லூரியிலிருந்து) அவர்கள் வெளியேறும் போதும் ( அவர்கள் வாகனத்தில் ஏறும்வரை), விழா மண்டபங்கள், பொதுவான வீடுகள் ஆகியவற்றிலும் (அவர்களுடன் கூடவே இருப்பது கடமையாகும்). அவர்கள் மீது யாரும் அத்துமீறாமலிருக்கவும், அவர்கள் பேச்சிலே வளைந்து கொடுத்து பராமுகமாக இருந்து விடாமலிருக்கவுமே ( இவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்). ஏனெனில் பெண்ணானவள் இயல்பிலே பலவீனமானவளும் உணர்ச்சி கூடியவளுமாவாள். அவள் ஆண்களைக் கண்டாலோ அல்லது

உணர்ச்சியைத் தூண்டும் வார்த்தைகளைக் கேட்டாலோ தன்னைக் கட்டுப் படுத்துவதில் பலவீனமாகி விடுவாள். எனவே பரிபூரணமான கண்காணிப்பும் பாதுகாப்பும் (அவளுக்குத்) தேவை. குறிப்பாக குழப்பங்கள் அதிகரித்து, (பாவச் செயலுக்கான) காரணங்கள் உருவாகி, (தனது) ஆசைகளை அடைந்து கொள்ளவும், உள்ளேயும் வெளியேயும் உணர்ச்சிகளை முழுமையாக அனுபவிக்கவும் வழிகள் சுலபமாகிவிட்ட இக்காலத்தில் (அவர்களுக்கு அதிகமாகப் பாதுகாப்புத் தேவை).

எனவே ஒவ்வொரு பொறுப்புதாரியும் தன்னுடைய பொறுப்பிலிருக்கும் பெண்ணைப் பாதுகாப்பது கடமையாகும். மேலும் அவருடைய ஆண், பெண் பிள்ளைகள் ஹராத்தின் பக்கம் சாயாமல், அல்லது விபசாரம் செய்வதன் பக்கம் உள்ளத்தைத் துண்டும் ஏதாவதொன்றைக் காணும்போது அல்லது கேட்கும் போது அ(ப்பாவத்)தை அவர்கள் ஆசை வைக்காமல், அவர்களுடைய உள்ளத்தைத் தடுக்கும் விதத்தில், அவர்களைத் தன்னடக்கம் உள்ளவர்களாக மாற்றுவதில் அக்கறை செலுத்துவது (பொறுப்பாளிமீது கடமையாகும்). (ஏனெனில் இப்பாவச் செயற்கள்) அல்லாஹ்வின் கோபத்திற்கும் ரோஷத்திற்கும் காரணமாக அமைவதுடன், அவனுடைய வேதனைகள் மனிதர்கள் மீது இறங்குவதற்கும் காரணமாக அமைந்து விடுகின்றது. ஏனெனில் நபிமொழியில் வந்துள்ளதைப் போல் விபசாரம் பரவுதல் கடுமையான நோய்கள் அதிகரிக்கவும், மக்களுக்கு நலவுகள், வசதிகள் கிடைக்காமல் இருக்கவும் காரணமாக அமைந்து விடுகின்றது.

உதவி தேடப்படக் கூடியவன் அல்லாஹ் (ஒருவனே). முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் கிளையார் மீதும் அல்லாஹ் ஸலவாத்தும் ஸலாமும் சொல்வானாக.

எழுதியவர்

அப்துல்லாஹ் பின் அப்திர்ரஹ்மான் அல்ஜிப்ரீன் (ரஹ்)

**முற்றும்**

**எல்லாப் புகழும் ஏக இறைவன் அல்லாஹ்வுக்கே**